9 - வது தமிழ் புத்தகம் வினா - விடை அடிப்படையில் தயாரிக்கப்பட்டது :

1) இந்தியாவில் உள்ள மொழிகள் அனைத்தும் எத்தனை மொழிக்குடும்பங்களில் அடங்கியுள்ளன? = நான்கு மொழிக் குடும்பங்களில்

2) நான்கு மொழிக்குடும்பங்கள் எவை என்று கூறுக?

1. இந்தோ - ஆசிய மொழிகள்;
2. திராவிட மொழிகள்;
3. ஆஸ்திரோ - ஆசிய மொழிகள்;
4. சீன - திபெத்திய மொழிகள்

3) நம் நாட்டில் பேசப்படும் மொழிகள் மொத்தம் எத்தனை? = 1300 க்கும் மேற்பட்ட மொழி + அதன் கிளை மொழிகள்

4) இந்திய நாட்டை 'மொழிகளின் காட்சிச்சாலை' எனக் குறிப்பிட்டவர் யார்? = ச.அகத்தியலிங்கம்

5) இந்தியாவில் மொத்தம்___மொழிக்குடும்பங்கள் மற்றும்___மொழிகள் உள்ளதாக கூறப்படுகின்றன? = 12 மொழிக்குடும்பங்கள் + 325 மொழிகள்

6) இந்தியாவில் உள்ள மொழி மற்றும் மொழிக்குடும்பங்களை கணக்கெடுப்பு செய்த நிறுவனம் எது? = இந்திய மானிடவியல் நிறுவனம்

7) திராவிட மொழிகளின் எண்ணிக்கை மொத்தம் எத்தனை? = 23 - க்கும் மேற்பட்டது

8) நாட்டில் இடம்பெற்றுள்ள மொழிகளின் வகைகள் :

| மொழிகள் வகைகள் | அதில் இடம் பெற்றுள்ள மொழிகள் |
|---|---|
| திராவிட மொழிகள் | தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் |
| தென்திராவிட மொழிகள் | தமிழ், மலையாளம், குடகு, துளு, கன்னடம், தோடா, கோத்தா, கொரகா, இருளா |
| நடுதிராவிட மொழிகள் | தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, ஜதபு |
| வடதிராவிட மொழிகள் | குரூக், மால்தோ, பிராகுய் |

9) 'உலக நாடுகளின் தாய்' - என்று அழைக்கப்படும் நாகரிகம் எது? = இந்திய நாகரிகம் - (கி.மு. 3000 ஆண்டுக்கு முற்பட்டது)

10) திராவிடம் என்பதன் பொருள் யாது? = திராவிட நாடு என்பதைக் குறிக்கும்

11) 'திராவிடம் என்பது ஒரு பெயரடை' - என்று கூறியவர் யார்? = கால்டுவெல்

12) கால்டுவெல் எந்த சொற்றொடர்களில் திராவிடம் என்னும் சொல் பெயரடையாக வந்ததாக கூறுகிறார்? = திராவிட மொழிகள், திராவிட இநம், திராவிட நாகரிகம்

13) தமிளியன் அல்லது தமுலிக் என்று அழைக்கப்பட்ட மொழிகள் எது? = தமிழ் மற்றும் அதன் கிளைமொழியான தெலுங்கு, மலையாளம், கன்னடம்

14) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - என்ற நூலின் ஆசிரியர் யார்? = கால்டுவெல்

15) திராவிடம் என்னும் சொல்லை முதன் முதலில் உருவாக்கியவர் யார்? = குமாரிலபட்டர்

16) திராவிடம் என்னும் சொல்லை பயன்பாட்டிற்கு கொண்டு வந்தவர் யார்? = கால்டுவெல்

17) திராவிட மொழிகள் என்றாலே தமிழ் மொழியைத் தான் குறிக்கும் என்று கூறியவர் யார்? = ஈராஸ் பாரதியார்

18) திராவிட பெரு மொழிகள் எனக் கூறப்படும் மொழிகள் எது? = தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்

19) திராவிட பெரும் மொழிகளின் பட்டியலில் எந்த மொழி மட்டும் நடுதிராவிட மொழியைச் சேர்ந்தது? = தெலுங்கு

20) திராவிடம் என்னும் சொல் எந்த சொல்லிருந்து உருவானது என்று கூறப்படுகிறது? = தமிழ் என்னும் சொல்லிருந்து உருவானது

21) தமிழ் → திரமிள → திரவிட → திராவிட - என்று உருவானது எனக் கூறியவர் யார்? = ஈராஸ் பாரதியார்

22) நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகப் பழமையான நூல் எது? = தொல்காப்பியம்

23) தமிழ் கொண்டுள்ள திராவிட மொழிக்கூறுகளின் சதவீதம் மொத்தம் யாது? = 80 %

24) செம்மொழிக்கான கூறுகள் மொத்தம் எத்தனை? = 9 கூறுகள்

25) எவற்றை செம்மொழிக்கான கூறுகள் என்று கூறப்படுகின்றன? = தொன்மை, தனித்தன்மை, மொழிகளின் தாய், சொல்வளம், இலக்கிய இலக்கண வளம், சிந்தனை வளம், கலைவளம், பண்பாட்டு வளம், பன்னாட்டு மொழி ஆகியவற்றை

26) தனக்கென தனிச்சிறப்பும், பல மொழிகள் தோன்றிவளர அடிப்படையாகவும் உள்ள மொழி எது? = மூலமொழி

27) மூலமொழியிலிருந்து தோன்றி வளரும் மொழியை எவ்வாறு அழைக்கப்படுகிறது? = கிளை மொழி என்று அழைக்கப்படுகிறது

28) 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முந்தோன்றிய மூத்தக்குடி' - எனக் கூறும் நூல் எது? = புறப்பொருள் வெண்பாமாலை

29) முதல் எழுத்துகள் மொத்தம் எத்தனை? = 30

30) ஈரசை கொண்ட சீர்களில் வரும் உயிரளபெடை வகை எது? = செய்யுளிசை அளபெடை (எ.கா - உழாஅர், படாஅர்)

31) மூவசைச் சீர்களில் வரும் உயிரளபெடை வகை எது? = இன்னிசை அளபெடை (எ.கா - கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்)

32) நம் உடலில் 12 உயிர் எழுத்துகள் + 6 இடையின எழுத்துகள் ஆகியவை பிறக்கும் இடம் எது? = கழுத்து

33) நம் உடலில் 6 மெல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் எது? = மூக்கு

34) நம் உடலில் 6 வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் எது? = மார்பு

| | |
|---|---|
| அ, ஆ - பிறப்பது | வாயைத் திறந்து ஒலிப்பதால் (அங்காப்பு) |
| இ, ஈ, எ, ஏ, ஐ - பிறப்பது | வாயைத் திறப்பதோடு மேல்வாய்ப் பல்லை நாவிளிம்பு தொடுவதால் |
| உ, ஊ, ஒ, ஓ, ஔ - பிறப்பது | உதடுகளைக் குவித்து ஒலிப்பதால் |
| க்,ங் - பிறப்பது | நாவினது முதற்பகுதி அண்ணத்தைத் தொடுவதால் |
| ச், ஞ் - பிறப்பது | நடுநா, நடு அண்ணத்தைத் தொடுவதால் |
| ட், ண் - பிறப்பது | நுனிநா, நுனி அண்ணத்தைத் தொடுவதால் |
| த், ந் - பிறப்பது | மேல்வாய்ப் பல்லினது அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் |
| ப், ம் - பிறப்பது | மேல் உதடும், கீழ் உதடும் பொருந்துவதால் |
| ய் - பிறப்பது | நாக்கின் அடிப்பகுதி மேல்வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் |
| ர், ழ் - பிறப்பது | மேல்வாயை நாக்கின் நுனி தடவுவதால் |
| ல் - பிறப்பது | மேல் வாய்ப்பல்லின் அடியை, நாவினது ஓரங்கள் தடித்து நெருங்குவதால் |
| ள் - பிறப்பது | மேல்வாய் நாவினது ஓரங்கள் தடித்துத் தடவுவதால் |
| வ் - பிறப்பது | மேல்வாய் பல்லைக் கீழுதடு பொருந்துவதால் |
| ற், ன் - பிறப்பது | மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் |
| ஆய்தம் - பிறக்கும் இடம் | தலை; வாயைத் திறந்து ஒலிப்பதால் |

35) 'பாரதியார் உலகவி! அகத்தில் அன்பும்' - எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்? = பாரதிதாசன்

36) உன்னையே நீ அறிவாய் - என்று கூறியவர் யார்? = சாக்ரடீஸ்

37) இந்திர மாநகரை ஆண்டு வந்தவர்கள் யார்? = பாண்டவர்கள்

38) மடப்பிடி - என அழைக்கப்படுபவர் யார்? = பாஞ்சாலி

39) பாஞ்சாலி சபதத்தின் நூல் அமைப்பு யாது? = 2 பாகம் + 5 சருக்கம் + 412 பாடல்கள்

40) பாஞ்சாலி சபதத்தில் இடம்பெற்றுள்ள 5 சுருக்கங்கள் எவையவை? = சூழ்ச்சிச்சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச் சருக்கம் ஆகிய ஐந்து சருக்கங்கள்

41) திருதராட்டிரன் தம்பி யார்? = பாண்டு மற்றும் விதுரன்

42) ‘பாரதர்தந் நாட்டிலே நாசமெய்த துணை புரியும் பாவியேன்’ - என்று கூறியவர் யார்? = விதுரன்

43) எந்த நூற்றாண்டை ‘உரைநடைக் காலம்’ என்று அழைக்கப்படுகிறது? = 20 நூற்றாண்டு

44) யாருடைய கவிதைகள் ‘20 நூற்றாண்டின் கவிதை மறுமலர்ச்சிக்கு வித்திட்டது’ எனக் கூறப்படுகின்றன? = பாரதியார் கவிதைகள்

45) யாருடைய கவிதைகள் தமிழ், தமிழர், தமிழுணர்வு, சமுதாய மறுமலர்ச்சி, பெண்ணடிமை, திராவிட இயக்கச் சிந்தனை, பொதுவுடமை ஆகியவற்றை பற்றி கூறுகின்றன? = பாரதிதாசன்

46) மன்னர்களை மட்டுமே மகிழ்வித்து வந்த கவிதை மரபை மாற்றி, எளிய மக்களை நோக்கிக் கவிதைக் கருவியைத் திருப்பி அமைத்த பெருமை எந்த புலவரைச் சேரும்? = பாரதியார்

47) ‘பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்தல் வேண்டும்’ - என்று கூறிய கவிஞர் யார்? = பாரதியார்

48) அமெரிக்கக் கவிஞர் "வால்ட்விட்மனின்" சாயலில் வசன கவிதை எழுதியவர் யார்? = பாரதியார்

49) யாருடைய கவிதைகள் ‘கற்போரை களிப்பில் ஆழ்த்துவன’ என்று கூறப்படுகின்றன? = கவிமணி

50) ‘எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம்நோக்கி நடக்கின்ற திறந்தவையம்’ - என்று பாடியவர் யார்? = பாரதிதாசன்

51) ‘எங்கள் பகைவர் எங்கே மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே’ - என்று பாடியவர் யார்? = பாரதிதாசன்

52) கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழின் சொல்லை மணியாகத் தொடுத்தவனும் நீதானோ, எனத் தாலாட்டு பாடியவர் யார்? = கவிமணி

53) மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா! - என்று பாடிய புலவர் யார்? = கவிமணி

54) ‘சாலைகளில் பல தொழில்கள் பெருகவேண்டும், சபைகளிலே தமிழ் எழுந்து முழங்கவேண்டும்’ - என்று பாடியவர் யார்? = கவிமணி

55) காந்தியக் கவிஞர் - என்று அழைக்கப்படுபவர் யார்? = நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்

56) பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும், பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும் - என்று பாடியவர் யார்? = நாமக்கல் கவிஞர்

57) யாருடைய கவிதையில் வரலாற்று செய்திகளும் இலக்கண விளக்கங்களும் பாடல்களின் இடையே கலந்து வருகின்றன? = சுரதாவின் கவிதையில்

58) சுரதா எந்தக் கவிஞரை உவமையாக பாவித்து செய்யுள் இயற்றியுள்ளார்? = மறைமலையடிகளார்

59) உவமைக் கவிஞர் - என்று அழைக்கப்படுபவர் யார்? = சுரதா (எ) இராசகோபாலன்

60) சுரதா பிறந்த ஊர் எது? = பழையனூர்

61) சுரதா பிறந்த ஆண்டு எது? = 1921

62) சுரதா அவர்கள் யார் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரை சுப்புரத்தினதாசன் என மாற்றிக்கொண்டார்? = பாரதிதாசன்

63) 'தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு' என்றும் கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்' - என்றுக் கூறி பாடிய கவிஞர் யார்? = நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்

64) 'ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால்' - எனத் தொடங்கும் கவிதையை பாடியவர் யார்? = முடியரசன்

65) யாருடைய கவிதையில் பகுத்தறிவு நோக்கும், முற்போக்குச் சிந்தனையும் தமிழுணர்வும் அதிகம் காணப்படுகிறது? = முடியரசன்

66) புதுக்கவிதை இதழ் எனக் கூறப்படும் இதழ் எது? = மணிக்கொடி

67) எழுத்து புதுக்கவிதையைப் பரவலாக்கப் பாடுபட்டவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? = கோவை வானம்பாடிக் குழுவினர்

68) பாரதிதாசனை தொடர்ந்து இயற்கையின் அழகை எழிலுறப் படம்பிடித்து காட்டுவதில் யாருடைய கவிதை சிறந்து விளங்குகிறது? = வாணிதாசனின் கவிதைகள்

69) 'புதுக்கவிதை வளர்ச்சியில் போற்றத்தக்க பங்கு வகித்தவர்' - என்று கூறப்பட்டவர் யார்? = வல்லிக்கண்ணன்

70) 'ஏழையின் குடிசையில், அடுப்பும் விளக்கும் தவிர, எல்லாமே எரிகின்றன' - என்று பாடியவர் யார்? = வல்லிக்கண்ணன்

71) கண்ணதாசனின் இயற்பெயர் யாது? = முத்தையா

72) கண்ணதாசனின் பிறந்த ஊர் யாது? = சிறுகூடல்பட்டி

73) கண்ணதாசன் பிறந்த ஆண்டு எது? = 1927

74) கண்ணதாசனின் நெடுங்கவிதை நூல்கள் சிலவற்றைக் கூறுக? = ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, கல்லக்குடி மகாகாவியம், இயேசு காவியம்

75) கம்பர் அம்பிகாபதி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு படைத்த நாடக நூல் எது? = இராசதண்டனை

76) கண்ணதாசனின் புதினங்கள் சிலவற்றைக் கூறுக? = ஆயிரம் திவு, அங்கயற்கண்ணி, வேலங்குடித்திருவிழா

77) கண்ணதாசனின் எந்த வரலாற்றுப் புதினம் சாகித்திய அகடாமி விருது பெற்றது? = சேரமான் காதலி

78) கண்ணதாசனின் 'சேரமான் காதலி' என்ற புதினம் எந்த ஆண்டு சாகித்திய அகடாமி விருது பெற்றது? = 1980

79) கண்ணதாசன் அவர்கள் நடத்திய இதழ்கள் எது? = தென்றல், முல்லை, கண்ணதாசன், தமிழ் மலர்

80) கண்ணதாசனின் கவிதை பொருள்கள் யாது? = வாழ்க்கையும் வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகளும்

81) 'நான் நிரந்தரமானவன் அழிவதில்லை; எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை' - என்றுக் கூறியவர் யார்? = கண்ணதாசன்

82) 'இருட்பகை இரவி இருளெனத் தம்மையும்' - எனத் தொடங்கும் பாடலை பாடியவர் யார்? = மனோன்மணீயம் பெ.சுந்தரனார்

83) 'வாரிக் களத்தடிக்கும் வந்தபின் கோட்டைபுகும்' - எனத் தொடங்கும் பாடலைப் படியவர் யார்? = காளமேகப் புலவர்

84) 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' - என்று பாடியவர் யார்? - ஔவையார்

85) 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' - என்று பாடியவர் யார்? = கனியன் பூங்கின்றனார்

86) கடற்பயணத்தை முந்நீர் வழக்கமெனக் குறிப்பிடும் நூல் எது? = தொல்காப்பியம்

87) தொல்காப்பிய நூலில் எந்த அதிகாரத்தில் முந்நீர் வழக்கம் இடம் பெற்றுள்ளது? = பொருளாதிகாரம்

88) பொருளாதிகாரத்தின் எந்த பிரிவில் முந்நீர் வழக்கம் இடம் பெற்றுள்ளது? = பொருள்வயிற் பிரிவு

89) பொருள்வயிற் பிரிவு எத்தனை வகைப்படும்? = 2 வகை - 1. காலில்(தரைவழிப் பிரிதல்), 2. களத்தில் (நீர்வழிப் பிரிதல்) பிரிவு

90) தமிழர்கள் யாரை 'யவனர்' என்று அழைத்தனர்? = கிரேக்கரையும் உரோமானியரையும் அழைத்தனர்

91) கடலைக் குறிக்கும் சொற்கள் சிலவற்றைக் கூறுக? = ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, பிணரி

92) தமிழகத்தில் பெரும்கப்பல்கள் கட்டுபவரை எவ்வாறு அழைத்தனர்? = கலம்செய் கம்மியர்

93) மரக்கலத்தைக் குறிக்கும் சொற்கள் சிலவற்றைக் கூறுக? = கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புனை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, ப∴றி, ஓடம் ஆகியவை

94) கடலில் செல்லும் பெரிய கப்பல் எவ்வாறு அழைக்கப்படுகிறது? = நாவாய்

95) சேரர் நாட்டின் துறைமுகம் எங்கு காணப்பட்டது? = முசிறி, உறையூர்

96) பாண்டியர் நாட்டின் துறைமுகம் காணப்பட்ட இடம் எது? = கொற்கை

97) சோழர் நாட்டின் துறைமுகம் காணப்பட்ட இடம் எது? = காவேரி பூம்பட்டினம்

98) கொற்கை துறைமுகத்தில் நடந்த முத்துக்குளித்தலைப் பற்றிக் கூறியவர் யார்? = மார்க்கோ∴போலோ

99) மார்க்கோ∴போலோ அவர்கள் எந்த நாட்டை சேர்ந்த வெளிநாட்டு பயணி ஆவார்? = வெனிஸ் நகரப் பயணி

100) கடற்கரையை அடுத்து இருக்கும் ஊர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? = பட்டினம், பாக்கம்

101) புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள், அலைகளால் அலைப்புண்டு தறியில் கட்டப்பட்ட யானை அசைவதுபோல் அசைந்தன, அவற்றின் உச்சியில் கொடிகள் அசைந்து ஆடின - என்று கூறும் நூல் எது? = பட்டினப்பாலை

102) கரும்பு, அதியமானின் முன்னோர் காலத்தில் எந்த நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டன? = சீன நாடு

103) பட்டினப் பாலையிலும் மதுரைக்காஞ்சியிலும் ஏற்றுமதியான பொருள்கள் சிலவற்றைக் கூறுக? = இரத்தினம், முத்து, வைரம், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண் துகில், அரிசி, ஏலக்காய், இலவங்கப்பட்டை, இஞ்சி

104) கெலன் கெல்லர் பிறந்த நாடு எது? = அமெரிக்கா

105) அமெரிக்காவில் எந்த மாகாணத்தில் கெலன் கெல்லர் பிறந்தார்? = அலபாமா

106) கெலன் கெல்லர் பிறந்த இடம் எது? = துஸ்கும்பியா

107) கெலன் கெல்லர் பிறந்த ஆண்டு யாது? = 27.06.1880

108) கெலன் கெல்லருக்கு பார்வை பறிபோன வயது எது? = 19 வது மாதம்

109) பத்தொன்பது மாதக் குழந்தையாக இருந்த போது கெலன் கெல்லருக்கு ஏற்பட்ட கொடிய நோய் யாது? = கண்கள் பாரா, காதுகள் கேளா, வாய்பேசாது

110) கெலன் கெல்லர் யாருடைய உதவியால் பெர்க்கின்ஸ் பள்ளியில் சேந்தார்? = அலெக்சாண்டர் கிரகாம்பெல்

111) கெலன் கெல்லர் எந்த வயதில் அலெக்சாண்டர் கிரகாம்பெல் உதவியால் பெர்கின்ஸ் பள்ளியில் சேர்ந்தார்? = 6 வது வயதில்

112) அமெரிக்காவின் புகழ்பெற்ற எழுத்தாளராகவும் அரசியல் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கியவர் யார்? = கெலன் கெல்லர்

113) இந்த உலகத்தில் அமைதி மலர வேண்டும் எனக் கேட்பேன் என்றவர் யார்? = கெலன் கெல்லர்

114) 'பெர்கின்ஸ் பள்ளி' ஒரு____பள்ளி ஆகும்? = பார்வையற்றோருக்கான பள்ளி

115) பெர்கின்ஸ் பள்ளி அமைந்துள்ள நாடு எது? = அமெரிக்கா

116) பெர்கின்ஸ் பள்ளி அமைந்துள்ள நகரம் எது? = பாஸ்டன் நகர்

117) கெலன் கெல்லர் ஆசிரியர் பெயர் எது? = அன்னிசல்லிவான்

118) கெலன் கெல்லர் படித்த காது கேளதோருக்கான பள்ளி அமைந்துள்ள நகரம் எது? = பாஸ்டனில் நகரில் உள்ள ஹொரஸ்மான் பள்ளி

119) கெலன் கெல்லர் படித்த ரைட் ஹீமாசன் பள்ளி அமைந்துள்ள நகரம் எது? = நியூயார்க்

120) யார் அளித்த பயிற்சியின் பயனாக கெலன் கெல்லர் கேம்பிரிட்ஜ் ரெட்கிளிஃப் கல்லூரியின் நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றார்? = ஆசிரியை அன்னிசல்லிவான் அளித்த பயிற்சியின் பயனாக

121) கெலன் கெல்லர் பட்டம்பெற்ற கல்லூரி எது? = கேம்பிரிட்ஜ் ரெட்கிளிஃப் கல்லூரி

122) கெலன் கெல்லரின் ஆசிரியர் அன்னிசல்லிவான் இறந்த ஆண்டு எது? = 1930

123) கெலன் கெல்லரின் எத்தனையாவது வயதில் தன் ஆசிரியர் அன்னிசல்லிவானை இழந்தார்? = 50 வது வயதில்

124) உலகில் பார்வையற்றோர்களுக்கான தேசிய நூலகம் அமைத்தவர் யார்? = கெலன் கெல்லர்

125) கெலன் கெல்லரின் மொழிபெயர்ப்பாளர் யார்? = பாலி தாம்சன்

126) கெலன் கெல்லர் எந்த நகரின் புகழ்பெற்ற பெண்மணியாகத் திகழ்ந்தார்? = வாஷிங்டன்

127) உலகின் எட்டாவது அதிசயம் எனப் பாராட்டப்பட்டவர் யார்? = கெலன் கெல்லர்

128) 'வாழ்க்கையில் இழப்பு என்பதே இல்லை, ஒன்று போனால் இன்னொன்று வரும். அந்த நம்பிக்கையிருந்தால் வாழ்க்கை வெறுமை ஆகாது - எனக் கூறியவர் யார்? = கெலன் கெல்லர்

129) 'நீங்கள் கண்பார்வை அற்றவராகவும் காது கேளாதவராகவும் இருந்தும் கூட எப்படி உங்களால் சாதிக்க முடிந்தது' - என கெலனிடம் கேட்டவர் யார்? = விக்டோரியா மகாராணி

130) கெலன் கெல்லர் எத்தனை நாள் தனக்கு கண்பார்வை கிடைத்ததாக கனவு கண்டார்? = 3 நாள்கள்

131) கெலன் கெல்லர் கனவில் கண் பார்வை கிடைத்தவுடன் முதல் நாள் பார்த்தது எது? = தன் ஆசிரியரை

132) கெலன் கெல்லர் கண் பார்வை கிடைத்தவுடன் இரண்டாம் நாள் பார்த்தது எதை? = கதிரவன் தோன்றுவது + புகழ் பெற்ற லியினார் டோ டாவின்சி கலைஞர்களின் ஓவியங்களையும் கலைப் பொருள்கள்

133) கெலன் கெல்லர் கண் பார்வை கிடைத்தவுடன் மூன்றாம் நாள் பார்த்தது எதை? = நகரின் கிழக்கு பக்கத்திலுள்ள ஆற்றுப்பாலம் + நியூயார்க்கில் உள்ள கம்பீரமான இரட்டைக் கோபுரக் கட்டடம் + செகப்பிரியருடைய நாடகம்

134) கெலன் கெல்லர் இறந்த ஆண்டு எது? = 1968

135) 'மண்ணுலக்கத்திலே உயிர்கள்தாம் வருந்தும்' - எனத் தொடங்கும் பாடலை பாடியவர் யார்? = வள்ளலார்

136) திருக்குறளில் 'உடைமை' என்னும் சொல்லில் அமைந்துள்ள அதிகாரங்கள் மொத்தம் எத்தனை? = 10 அதிகாரங்கள்

137) திருக்குறளில் உடமை என்னும் சொல்லில் அமைந்த 10 அதிகாரங்களைக் எவையென்று கூறுக? = அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, அருளுடைமை, அறிவுடைமை, ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை, பண்புடைமை, நாணுடைமை

138) திருக்குறளுக்கும் எந்த எண்ணிற்கும் மிகப் பெரிய தொடர்புடையது? = 7 என்ற எண்

139) 7 என்னும் எண் திருக்குறளில் எத்தனை குறட்பாவில் இடம்பெற்றுள்ளது? = 8 குறள்களில்

140) குறுந்தொகையை தொகுத்தவர் யார்? = பூரிக்கோ

141) குறுந்தொகை நூலில் உள்ள கடவுள் வாழ்த்து பாடலை பாடிய புலவர் யார்? = பாரதம் பாடிய பாடிய பெருந்தேவனார்

142) எந்த நூலின் வாயிலாகப் பண்டைத் தமிழரின் இல்வாழ்க்கை, ஒழுக்கம், மகளிர், மாண்பு, அறவுணர்வு முதலியவற்றை நாம் அறியலாம்? = குறுந்தொகை

143) குறுந்தொகைப் பாடல்களின் எண்ணிக்கை யாது? = 401 பாடல்கள்

144) கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கினை அறிந்து கலம் செலுத்தினர் - என்பதைக் கூறும் நூல் எது? = புறநானூறு

145) யவனர்கள் பொன்னுக்கு பதிலாக மிளகை ஏற்றிச் சென்றனர் என்ற செய்தியைக் கூறும் நூல் எது? = அகநானூறு

146) ஏற்றுமதி பொருள்களில் 'முத்தே' முதலிடம் பெற்றது - என்றுக் கூறும் நூல் எது? = மதுரைக்காஞ்சி மற்றும் சிறுபாணாற்றுப்படை

147) பழங்காலத்தில் வணிகப்பொருள்கள் பற்றிய குறிப்புகள் எந்த நூலில் காணப்படுகின்றன? = பட்டினப்பாலை மற்றும் மதுரைக்காஞ்சி

148) மேலைக்கடல் முழுவதும் கப்பல் விடுவோம் - என்று கனவு கண்டவர் யார்? = பாரதி

149) ஓலைத்தூக்கு, ஓலைப்பாசுரம் - இவை இரண்டும் எவ்வாறு அழைக்கப்படுகிறது? = சீட்டுக்கவி

150) குதிரை - ஐக் குறிக்கும் சில பெயர்களைக் கூறுக? = கந்துருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை, குந்தம், பாடலம், சடிலம், கிள்ளை ஆகியவை

151) குதிரையைக் குறிக்கும் பல பெயர்கள் வைத்து சீட்டுக்கவி மூலம் கவிநயம் அமைத்தவர் யார்? = அந்தகக்கவி வீரராகவர்

152) பிறவிலேயே கண்ணொளி இழந்த புலவர் யார்? = அந்தகக்கவி வீரராகவர்

153) இலங்கை மன்னன் பாராசசேகர மன்னனைப் பற்றி பாடிய புலவர் யார்? = அந்தகக்கவி வீரராகவர்

154) இலங்கை மன்னன் பாராசசேகர மன்னனைப் பாராட்டி அந்தகக்கவி வீரராகவர் பெற்ற பரிசில் எது? = ஒரு யானை, போற்பந்தம், ஓர் ஊர் ஆகியவை

155) அந்தகக்கவி வீரராகவரின் நூல்கள் சிலவற்றைக் கூறுக? = திருக்கழுக்குன்றப்புராணம், திருக்கழுக்குன்றமாலை, சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், திருவாரூர் உலா, சந்திரவாணன் கோவை

156) தனிப்பாடல் திரட்டில் பாடிய புலவர்கள் மற்றும் பாடல்களின் எண்ணிக்கை யாது? = பாடிய புலவர்களின் எண்ணிக்கை - 110; பாடல்களின் எண்ணிக்கை - 1113

157) தனிப்பாடல் திரட்டில் அந்தகக்கவி வீரராகவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை யாது? = 39

158) சேலத்து வேந்தன் செழியதரையனுக்குக் குதிரைவேண்டி அந்தகக்கவி வீரராகவர் எழுதியப் பாடல் எது? = சீட்டுக்கவி

159) ஆனந்தரங்கர் தான் எழுதிய நாட்குறிப்புக்கு அவர் இட்ட பெயர் யாது? = தினப்படி செய்திக்குறிப்பு, சொஸ்தலிகிதம்

160) ஆனந்தரங்கர் பிறந்த ஊர் யாது? = பிரம்பூர் (பெரம்பூர்)

161) ஆனந்தரங்கரின் ஆசிரியர் பெயர் யாது? = எம்பார்

162) யார் வேண்டுகோளுக்கு இணங்க ஆனந்தரங்கர் புதுவையில் குடியேறினார்? = தன் தந்தை திருவேங்கடம், மைத்துனர் நைனியப்பரின் வேண்டுகோளுக்கு இணங்க

163) ஆனந்தருக்கு '3000 குதிரைகள் மற்றும் மன்சுபோதார்' என்ற பட்டத்தை வழங்கியவர் யார்? = முசபர்சங்

164) எந்த ஆளுநரின் மொழிப்பெயர்ப்பாளர் இறந்ததால் ஆனந்தரங்கருக்கு துபாசி வேலை கிடைத்தது? = துய்ப்ளெக்சு

165) எந்த ஆண்டு முசர்பங் ஆனந்தருக்கு 3000 குதிரைகள் மற்றும் மன்சுபோதார் என்ற பட்டத்தை வழங்கினார்? = கி.பி. 1749

166) எத்தனை ஆண்டு காலம் ஆனந்தரங்கர் நாட்குறிப்பு எழிதினார்? = 25 ஆண்டுகள்

167) ஆனந்தரங்கர் நாட்குறிப்பு எழுதிய ஆண்டுகள் எது? = 1736 - 1761

168) எந்த கப்பல் பிரெஞ்சு நாட்டிலிருந்து கிளம்பியதாக ஆனந்தரங்கர் கூறுகிறார்? = இலபூர்தொனே

169) யாருடைய திருமணத்திற்கு ஆளுநர் வந்ததாக ஆனந்தரங்கர் கூறினார்? = சுங்குசோஷல செட்டியார் மகள் திருமணம்

170) இரண்டாவது முறையாக இராமநாடகத்தை அருணாச்சல கவிராயர் யார் முன்னிலையில் அரங்கேற்றினார்? = ஆனந்தரங்கர் முன்னிலையில்

171) நாட்குறிப்பு இலக்கியத்தின் முன்னோடி என்று அழைக்கப்பட்டவர் யார்? = பெப்பிசு

172) 'இந்தியாவின் பெப்பிசு' + 'நாட்குறிப்பு வேந்தர்' - எனப் பாரட்டப்பட்டவர் யார்? = ஆனந்தரங்கர்

173) 'டைஸ்ட்' - என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் பொருள் யாது? = நாள்

174) 'டைரியம்' - என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் பொருள் யாது? = நாட்குறிப்பு

175) 'ஆனந்தரங்கருடைய நாட்குறிப்புகள் அவரது காலத்தில் யாருமே புரிந்திராத அரியதோர் இலக்கியப் பணி' - என்று கூறியவர் யார்? = கே.கே.பிள்ளை

176) 'தாம் நேரில் கண்டும் கேட்டும் அறிந்துள்ள செய்திகளைச் சித்திரகுப்தனைப்போல் ஒன்று விடாமல் குறித்து வைத்துள்ளார்' - என்று கூறியவர் யார்? = வ.வே.சு.ஐயர்

177) ஆனந்தரங்கக்கோவை என்ற இலக்கிய நூலினை எழுதியவர் யார்? = தியாகராச தேசிகர்

178) ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் என்ற இலக்கிய நூலினை எழுதியவர் யார்? = அரிமதி தென்னகன்

179) ஆனந்தரங்க விஜயசம்பு என்ற இலக்கிய நூலினை எழுதியவர் யார்? = சீனுவாசக்கவி

180) ஆனந்தரங்க விஜயசம்பு என்ற நூல் எந்த மொழி நூலாகும்? = வடமொழி நூல்

181) ஆனந்தரங்க ராட்சந்தமு என்ற இலக்கிய நூலினை எழுதியவர் யார்? = கஸ்தூரி ரங்கக்கவி (தெலுங்கு)

182) 'ஏழை என்றும் அடிமை என்றும் இல்லை' - என்ற பாரதியாரின் கனவு நனவாக வேண்டும் எனக் கூறியவர் யார்? = மு.வரதராசனார்

183) உலகில் உள்ள நாடுகள் மொத்தம் எத்தனை நாடுகள் உள்ளன? = 235 நாடுகள்

184) உலகில் உள்ள மொத்த நாடுகளில் எத்தனை நாடுகளில் தமிழ் இனங்கள் பரவியுள்ளன? = 154

185) சாதுவன் வாணிகம் செய்ய கடல் கடந்து சென்ற குறிப்பு காணப்படும் நூல் எது? = மணிமேகலை

186) தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் தீவு எது? = ரியுனியன் தீவு

187) தமிழர்கள் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகள் எது? = சிங்கப்பூர், மொரிசியசு

188) தமிழ் ஆட்சி மொழியாகத் திகழும் நாடுகள் எது? = இலங்கை, சிங்கப்பூர், மலேசியா

189) எந்த நாட்டில் வாழும் தமிழர்களில் 95 விழுக்காட்டினர் தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழிலேயே கல்வி கற்கின்றனர்? = இலங்கை

190) இறையனார் எழுதிய களவியலுக்கு உரை கண்டவர் யார்? = நக்கீரர்

191) நக்கீரர் படைத்த வேறு நூல்கள் எது? = திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை

192) புறம் என்பது எவற்றின் சிறப்புகளைக் கூறும்? = ஒருவரின் வீரம், கொடை, கல்வி முதலிய சிறப்புகளைக் குறிக்கும்

193) தமிழ்த்தென்றல் - என அழைக்கப்பட்டவர் யார்? = திரு.வி.கலியாணசுந்தரனார்

194) திரு.வி.க படித்த பள்ளி எது? = வெஸ்லி பள்ளி

195) வெஸ்லி பள்ளி அமைந்துள்ள இடம் எது? = சென்னை - இராயப்பேட்டை

196) திரு.வி.க - வின் பெற்றோர் பெயர் யாது? = விருத்தாசலனார் - சின்னம்மையார்

197) திரு.வி.க பிறந்த ஆண்டு எது? = 1883

198) திரு.வி.க அவர்கள் தமிழ்ப் பயின்ற ஆசிரியரின் பெயர் எது? = கதிரைவேலர்

199) திரு.வி.க - விற்கு தமிழ் கற்று தந்த கதிரைவேலனார் எந்த நாட்டைச் சேர்ந்த ஆசிரியர் ஆவார்? = ஈழநாட்டை சேர்ந்தவர்

200) தமிழை வளர்க்க வேண்டும் என்றால் பிறமொழி வெறுப்பதன்று' - எனக் கூறியவர் யார்? = திரு.வி.க

201) திரு.வி.க - விற்கு வாய்ந்த மொழிநடை 'மலை' எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்துள்ளது என்றவர் யார்? = தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

202) 'நான் தனியாக வாழவில்லை தழிழோடு வாழ்கிறேன்' - எனக் கூறியவர் யார்? = திரு.வி.க (தன் மனைவி இறந்த போது)

203) பேசுவது போலவே எழுதுவது, எழுதுவது போலவே பேசுவது - என்று வாழ்ந்தவர் யார்? = திரு.வி.க

204) திரு.வி.க எழுதிய உரைநடை நூல்கள் மற்றும் செய்யுள் நூல்கள் சிலவற்றைக் கூறுக:-

| | |
|---|---|
| திரு.வி.க எழுதிய உரைநடை நூல்கள் | மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம், இமயமலை அல்லது தியானம், முருகன் அல்லது அழகு, சைவத்திறவு, சைவத்தின் சமரசம், கடவுட் காட்சியும் தாயுமானவரும், இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், தமிழ்நாடும் நம்மாழ்வாரும், நாயன்மார் வரலாறு, தமிழ்நூல்களில் பௌத்தம், காதலா? முடியா? சீர்திருத்தமா?, என் கடன் பணிசெய்து கிடப்பதே, இந்தியாவும் விடுதலையும், தமிழ்ச்சோலை, உள்ளொளி |
| திரு.வி.க எழுதிய செய்யுள் நூல்கள் | முருகன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், கிறித்துவின் அருள் வேட்டல், அருகன் அருகே, உரிமை வேட்டல், பொதுமை வேட்டல், பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியமும் |

205) திரு.வி.க - நடத்திய இதழ்களின் பெயர்கள் யாது? = தேசபக்தன், நவசக்தி

206) அறிஞர் அண்ணா உள்ளிட்ட அக்கால இளைஞர்களை தன் உணர்ச்சிமிகு பேச்சால் தம்பால் ஈர்த்தவர் யார்? = திரு.வி.க

207) உரைநடை எழுதுவது எனது தொழில் என்று கூறியவர் யார்? = திரு.வி.க

208) 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' - என்பதை முழு மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர் யார்? = திரு.வி.க

209) வடமொழி சொல் கலவாமல் தூயதமிழில் எழுதி பேச வேண்டும் என வலியுறுத்தியவர் யார்? = திரு.வி.க

210) காந்தியடிகள் தமிழகம் வந்தபோதெல்லாம் அவரது மேடை உரையை மொழிபெயர்த்தவர் யார்? = திரு.வி.க

211) திரு.வி.க அவர்கள் வயதாகி படுக்கையில் இருந்த போது வெளியிட்ட நூல் எது? = வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுகைப் பிதற்றல்

212) திரு.வி.க அவர்கள் யார் உதவியுடன் 'வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுகைப் பிதற்றல்' என்ற நூலை வெளியிட்டார்? = மு.வரதராசனார்

213) 'இளைஞர்களே! தமிழுலகின் இழிந்த நிலை ஊறுங்கள்; ஓர்ந்து உங்கள் பொறுப்பை உணருங்கள்; தமிழ்த்தையைப் புதுப்போர்வையில் ஒப்பனை செய்து அரியாசனத்தில் அமர்த்த சூள்கொண்டு எழுங்கள்; எழுங்கள்; பழந்தமிழ் வீரத்துடன் எழுங்கள் - என்று இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தவர் யார்? = திரு.வி.க

214) திரு.வி.க இறந்த ஆண்டு எது? = 1953

215) பசிப்பிணி என்னும் பாவி - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது? = மணிமேகலை

216) 'உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல்கள் எது? = மணிமேகலை, புறநானூறு

217) 'நீரின்றமையாது உலகு' - என்ற வரியைக் கூறியவர் யார்? = வள்ளுவர்

218) 'மீதுண் விரும்பேல்' - என்ற வரியைக் கூறியவர் யார்? = ஔவையார்

219) 'காலை மாலை உலாவிநிதம்' - எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்? = கவிமணி

220) 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' - என்ற வரியைக் கூறியவர் யார்? = திருமூலர்

221) நோய் தீர்க்கும் மூலிகை பெயர்கள் மற்றும் பயங்கள் :-

| மூலிகை தாவரம் | சிறப்புப் பெயர்கள் | தீர்க்கும் நோய்கள் |
|---|---|---|
| கீழக்காய்நெல்லி | கீழாநெல்லி, கீழ்வாய்நெல்லி | இந்த தாவரத்துடன் கற்கண்டு சேர்த்து உண்பதால் சிறுநீர்த் தொடர்பான நோய்கள் நீங்கும் + மஞ்சள் காமாலை |
| துளசி | | துளசி செயிடின் இலைகளை நீரில் இட்டு கொதிக்க செய்து ஆவி பிடித்தால் மார்புசளி, நார்க்கோவை, தலைவலி நீங்கும் + துளசி இலைகள் பூசினால் படை நீங்கும் |
| தூதுவளை | தூதுளை, சிங்கவல்லி, ஞானப்பச்சிலை | இது குரல் வளத்தை மேம்படுத்தும், வாழ்நாளை நீடிக்கும் |
| குப்பைமேனி | மேனி துலங்க குப்பைமேனி | நச்சுக்கடிகளுக்கு நல்ல மருந்து |
| கற்றாழை | குமரி | பெண்களின் கருப்பை சார்ந்த நோய்களை நீக்குகிறது |
| | | இதனை அரைத்து தடவினால் எலும்பு முறைவி விரைவில் கூடும் |

| | | |
|---|---|---|
| முருங்கை | | + இரும்பு சத்து நிறைந்துள்லதால் கூந்தலை வளரச் செய்வதில் பெரும் பங்கு உண்டு |
| கறிவேப்பில்லை | | இது சீதபேதி, நச்சு போன்றவற்றை சரி செய்யும். மணமூட்டி உணவின் மாது விருப்பை உண்டாக்கும் |
| கரிசலாங்கண்ணி | கரிசாலை, கையாந்தகரை, பிருங்கராசம், தேகராசம் | இரத்தசோகை, செரிமான கோளாறு, மஞ்சள் காமாலைக்கு சிறந்த மருந்து + கண் பார்வையை தெளிவாக்கும் + நரையை போக்கும் |
| மணித்தகாகாளிக்கீரை | | வாய்ப்புண்ணையும், குடற்புண்ணையும் குணப்படுத்தும் |
| அகத்திக்கீரை | | பல் சார்ந்த நோய்களை குணமாக்கும் |
| வல்லாரை | | நினைவாற்றலை பெருக்க உதவும் |
| மஞ்சள் | | நெஞ்சிலுள்ள சளியை நீக்கும் |
| கொத்துமல்லி | | பித்தத்தைப் போக்கும் |
| சீரகம் | | வயிற்றுச் சூட்டைத்தணிக்கும் |
| மிளகு | | தொண்டைக் கட்டைத் தொலைக்கும் |
| பூண்டு | | வளியகற்றி வயிற்றுப்பொருமலை நீக்கிப் பசியை மிகுவிக்கும் |
| வெங்காயம் | | குளிர்ச்சி உண்டாக்கிக் குருதியைத் தூய்மைப்படுத்தும் |
| பெருங்காயம் | | வளியை வெளியேற்றும் |
| இஞ்சி | | பித்தத்தை ஒடுக்கிக் காய்ச்சலைக் கண்டிக்கும் |
| தேங்காய் | | நீர்க்கோவையை நீக்கும் |
| நல்லெண்ணெய் | | கண் குளிர்ச்சியும் அறிவுத்தெளிவும் உண்டாக்கும் |

222) சான்றாண்மை பண்புகளால் நிறைந்து நிற்றல் நல்லவற்றையெல்லாம் கடமையென மேற்கொண்டு வாழ்பவர்கள் யார்? = சான்றோர்

223) எவற்றை சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் எனக் கூறப்படுகிறது? = அன்பு, நாண், ஒப்பரவு, கண்ணோட்டம், வாய்மை

224) 'அன்புநாண் ஒப்பரவு கண்ணோட்டம் வாய்மையொடு' - என்ற குறட்பாவில் பயின்று வரும் அணி யாது? = ஏகதேச உருவக அணி

225) சான்றான்மையை அளந்தறியும் உரைகல் எது? = தோல்வியை ஒப்புக்கொள்வதே

226) பொருள்கோள் மொத்தம் எத்தனை வகைப்படும்? = 8 வகைப்படும்

227) பொருள்கோள்களின் வகைகள் எவை :

| வ.எண் | பொருள்கோள் வகைகள் | வரையறை |
|---|---|---|
| 1 | ஆற்றுநீர்ப் பொருள்கோள் | இடையறாது செல்லும் ஆற்றுநீரைப் போலப் பாடலின் சொற்கள் முன்பின் மாறாது நேரே சென்று பொருள் தருவது |
| 2 | மொழிமாற்றுப் பொருள்கோள் | ஓரடியுள் உள்ள சொற்களை அவைதரும் பொருளுக்கு ஏற்ப மாற்றிக் கூறுதல் |
| 3 | நிரல்நிறைப் பொருள்கோள் | செய்யுளில் இருக்கின்ற சொற்களை முறை மாறாமல் வரிசையாக அமைத்துப் பொருள்கொள்வது |
| 4 | விற்பூட்டுப் பொருள்கோள் (அல்லது) பூட்டுவிற்பொருள்கோள் | வில்லின் இரு முனைகளும் இணைத்துக் கட்டுதல் போல செய்யுளின் முதலில் அமைந்த சொல்லும்,இறுதியில் அமைந்த சொல்லும் பொருள்படப் பொருந்துவது |
| 5 | தாப்பிசைப் பொருள்கோள் | ஊஞ்சலின் நடுநின்ற கயிறு முன்னும், பின்னும் சென்று வருதல் போலச் செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொற்களுடன் பொருந்திப் பொருளைத் தருவது |
| 6 | அளைமறிப் பாம்புப் பொருள்கோள் | பாம்பு புற்றில் தலைவைத்து நுழையும்போது தலை மேலாகவும், உடல் அடுத்தும் செல்வது போலச் செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை எடுத்து முதலில் வைத்துக் கூட்டிப் பொருள் கொள்வது |
| 7 | கொண்டு கூட்டுப் பொருள்கோள் | செய்யுளின் பல அடிகளிலும் கூறப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்பக் கூட்டிப் பொருள்கொள்வது |
| 8 | அடிமாற்றுப் பொருள்கோள் | செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் இருப்பது |

228) காரியாசான் யாருடைய மாணாக்கர் ஆவார்? = மதுரை தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணவர்

229) சிறுபஞ்சமூலம் நூலில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது? = 97 வெண்பாக்கள் + கடவுள் வாழ்த்து

230) சிறுபஞ்சமூலத்தின் ஒவ்வொரு பாடலிலும் எத்தனை அறக்கருத்துக்கள் உள்ளன? = ஐந்து அறக்கருத்துக்கள்

231) ‘பழந்தமிழ் கற்றல் இன்பம்’ - எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்? = உவமைக் கவிஞர் சுரதா

232) சுப்புரத்தினதாசனின் இயற்பெயர் யாது? = இராசகோபாலன்

233) சுரதா அவர்கள் பிறந்த ஊர் எது? = பழையனூர்

234) சுரதாவின் நூல்கள் சிலவற்றைக் கூறுக? = தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள்

235) சுரதாவின் எந்த நூல் தமிழக வளர்ச்சித்துறையின் பரிசைப் பெற்றது? = தேன்மழை

236) சுரதாவிற்கு கலைமாமணிப் பட்டம் யாரால் வழங்கப்பட்டது? = தமிழ் இயல் இசை நாடக மன்றத்தின் மூலம்

237) தமிழக அரசின் பாவேந்தர் விருது பெற்றவர் யார்? = சுரதா

238) 'பழந்தமிழ் கற்றல் இன்பம்' - எனத் தொடங்கும் பாடல் சுரதாவின் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது? = தேன்மழை

239) சுரதா எழிதிய தேன்மழை எனும் நூலில் எத்தனை பகுதிகள் கவிதைகளாக பகுக்கப்பட்டுள்ளன? = 16 மகுதிகள் ( இயற்கையெழில் முதலாக ஆராய்ச்சி ஈறாக)

240) காமராசர் பிறந்த ஆண்டு எது? = 1903 ஜீலை 15

241) காமராசர் பல அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்து தம் பேச்சாற்றலை வளர்த்த நூல் நிலையம் எது? = மெய்கண்டான் புத்தகசாலை

242) காமராசர் அவர்கள் மெய்கண்டான் புத்தகசாலையில் யாருடைய வாழ்க்கை வரலாறுகளை படித்து தன் பேச்சாற்றலை வளர்த்துக் கொண்டார்? = இலெனின், கரிபால்டி, நெப்போலியன்

243) காமராசர் பங்குகொண்ட போராட்டங்கள் யாவை? = சைமன் குழு எதிர்ப்பு, உப்புச் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம்

244) காமராசர் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு எது? = 1937

245) காமராசர் தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு? = 1939 (12 ஆண்டுகள் வரை தலைவராக இருந்தார்)

246) காமராசரின் அரசியல் குரு யார்? = சத்தியமூர்த்தி

247) யார் தமிழ்நாட்டின் மேயராக இருக்கும் போது காமராசர் அவர்கள் தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்? = சத்தியமூர்த்தி

248) 1945 - இல் பிரகாசம், 1947 - இல் ஒமந்தூர் இராமசாமி மற்றும் 1949 - இல் குமாரசாமி ஆகியோர் முதல்வராகப் பதவியேற்பதற்குக் காரணமாக இருந்தவர் யார்? = காமராசர்

249) காமராசர் தமிழக முதல்வர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு எது? = 1954

250) காமராசர் முதல்வராக இருந்த போது எந்த ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன? = இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள்

251) தமிழ்நாட்டில் தொழிற்பேட்டைகளை நிறுவிய இடங்கள் எது? = கிண்டி, அம்பத்தூர், இராணிப்பேட்டை

252) நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை, இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, கிண்டி அறுவைசிகிச்சைக் கருவித் தொழிற்சாலைகள் யார் காலத்தில் தொடங்கப்பட்டன? = காமராசர்

253) சர்க்கரை ஆலை, சிமெண்ட் தொழிற்சாலை, பெரம்பூர்த் தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலை, மேட்டூர் காகிதத் தொழிற்சாலை முதலியன யார் காலத்தில் தொடங்கப்பட்டன? = காமராசர்

254) யாருடைய காலத்தில் தமிழகத்தில் கட்டாயக் கல்வி முறை நடைமுறைப்படுத்தப்பட்டது? = காமராசர்

255) காமராசரின் புகழுரைகள் சிலவற்றைக் கூறுக? = தன்னலமற்ற தலைவர், கர்ம வீரர், கல்விக்கண் திறந்த முதல்வர், ஏழைப்பங்காளர்

256) காமராசரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் கல்வி அமைச்சர் மற்றும் தொழில் அமைச்சராக இருந்தவர்கள் யார்? = சி.சுப்பரமணியம் மற்றும் ஆர்.வெங்கட்ராமன்

257) காமராசரின் நோக்கம் எது? = தெருதோறும் தொடக்கப்பள்ளி, ஊர்தோறும் உயர்நிலைப்பள்ளி

258) பள்ளி வேலைநாள்களை 180 இல் இருந்து 200 ஆக உயர்த்தியவர் யார்? = காமராசர்

259) தொடக்கப்பள்ளியில் மதிய உணவுத் திட்டம் யாரால் தொடங்கப்பட்டது? = காமராசர்

260) காமராசர் காலத்தில் பள்ளிகளுக்கான அடிப்படை பொருட்கள் பெறுவதற்காக நடத்தப்பட்ட மாநாடு எது? = பள்ளி சீரமைப்பு மாநாடு

261) காமராசர் காலத்தில் எத்தனை பள்ளி சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டன? = 133 மாநாடுகள்

262) 133 பள்ளி சீரமைப்பு மாநாடுகள் எத்தனை ஆண்டுகளாக நடத்தப்பட்டன? = ஈராண்டுகள்

263) மருத்துவக்கல்லூரி முதலான தொழிற்கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடனளிக்க ஏற்பாடு செய்த முதல்வர் யார்? = காமராசர்

264) தஞ்சாவூர்ப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை திருத்தி, சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு அறுபது விழுக்காடு பங்கு கிடைக்க வழிவகை செய்தவர் யார்? = காமராசர்

265) சீனப்படையெடுப்பு நடைபெற்ற ஆண்டு எது? = 1962

266) நேரு காலமான ஆண்டு எது? = 1964

267) காமராசர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக பதவியேற்ற ஆண்டு எது? = 1963

268) நிலசீர்திருத்தம் மற்றும் நில உச்ச வரம்பு முப்பது ஏக்கர் எனக் குறைத்தவர் யார்? = காமராசர்

269) காமராசர் எந்த நகரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக பதவியேற்றார்? = புவனேஸ்வர் நகர்

270) நேருவின் மறைவுக்குப்பின் லால்பகதூர் சாஸ்திரியையும், பகதூர் மறைவுக்கு பின்பு இந்திரா காந்தியையும் நாட்டின் பிரதமராக ஆக்கியதில் பெரும்பங்காற்றியவர் யார்? = காமராசர்

271) லால்பகதூர் சாஸ்திரி இறந்த இடம் எது? = தாஸ்கண்ட் (1966)

272) காமராசர் மணிமண்டபம் அமைந்துள்ள இடம் எது? = கன்னியாகுமரி

273) காமராசர் அரங்கம் அமைந்துள்ள இடம் எது? = தேனாம்பேட்டை

274) "கல்விக் கண் திறந்தவர்" எனத் தமிழுலகம் போற்றும் தலைவர் யார்? = காமராசர்

275) கல்வி வளர்ச்சி நாள் என கூறப்படும் நாள் எது? = ஜீலை 15

278) "தலைவர்களை உருவாக்குபவர்" - என அழைக்கப்பட்டவர் யார்? = காமராசர்

279) காமராசர் அவர்களுக்கு நடுவணரசு அளித்த விருது எது? = பாரத ரத்னா

280) எந்த ஆண்டு காமராசர் அவர்கள் பாரத ரத்னா விருதை பெற்றார்? = 1976

281) காமராசர் இறந்த ஆண்டு எது? = 1972, அக்டோபர் 2

282) ‘கிளி பேசுகிறது’ - என்ற கதை எடுக்கப்பட்ட தொகுப்பு எது? = விந்தன் கதைகள்

283) தன்னை பிறர் தாக்கும் போது தடுக்காமல் இருந்தவர் யார்? = மகாவீரர்

284) ‘அன்பும் ஆர்வமும் அடக்கமும் சேர்ந்தும்’ - எனத் தொடங்கும் பாடலின் ஆசிரியர் யார்? = கவிஞர்.வெ.இராமலிங்கனார்

285) அயலார் தமக்கு அன்பே செய்யும் நாணம் கெடாமல் நட்பு கொண்டாடும் - என்ற வரி எதற்கு உவமையாக கூறப்படுகிறது? = பெண்மை

286) பெண்மையின் பண்புகள் எனக் கூறப்படுவது எது? = அன்பு, ஆர்வம், அடக்கம்

287) தில்லையாடி வள்ளியம்மையின் பெற்றோர் பெயர் யாது? = முனுசாமி - மங்களம்

288) புதுச்சேரியில் வாழ்ந்த தில்லையாடி வள்ளியம்மை பெற்றோர் வேலைத்தேடிச் சென்ற நாடு எது? = தென்னாப்பிரிக்கா

289) தென்னாப்பிரிக்காவில் எந்த நகரில் தில்லையாடி வள்ளியம்மை பெற்றோர் வேலைத்தேடிச் சென்றனர்? = ஜோகன்ஸ்பர்க்

290) தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாடு எது? = தென்னாப்பிரிக்கா

291) தில்லையாடி வள்ளியம்மை பிறந்த ஆண்டு எது? = 1898

292) தென்னாப்பிரிக்கா நாட்டின் திருமண பதிவு சட்டப்படியும், கிறிஸ்துவ மத சட்டப்படியும் நடைபெறாத திருமணம் செல்லாது என்று அந்நாட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய ஆண்டு எது? = 1912

293) திருமணச்சட்டத்தை எதிர்த்து எந்த ஆண்டு வள்ளியம்மை அவர்கள் தென்னாப்பிரிக்காவில் அறப்போராட்டம் நடத்தினார்? = 1913

294) வள்ளியம்மை கைது செய்யப்பட்ட வயது எது? = 15 வது அகவை

295) வள்ளியம்மை அவர்கள் எத்தனை ஆண்டு காலம் சிறைதண்டனை பெற்றார்? = 3 ஆண்டு கடுங்காவல் தண்டனை

296) தென்னாப்பிரிக்காவில் திருமணச்சட்டத்தை எதிர்த்ததால் வள்ளியம்மை அவர்கள் கைது செய்யப்பட்ட இடம் எது? = வால்க்ஸ்ரஸ்ட்

297) வள்ளியம்மை இறந்த ஆண்டு எது? = 1914

298) வள்ளியம்மை இறந்த வயது எது? = 16 வது அகவை

299) சிறைதண்டனைக்காக நீ வருந்துகிறாயா? - என்று வள்ளியம்மையை பார்த்து கேட்டவர் யார்? = காந்தி

300) இல்லை இல்லை மீண்டும் சிறை செல்லவதற்கு தயார் - என்று காந்தியடிகளிடம் கூறியவர் யார்? = வள்ளியம்மை

301) இந்தியர்களின் நலனுக்காக எத்தகு இன்னல்களையும் ஏற்பேன் என்று கூறியவர் யார்? = தில்லையாடி வள்ளியம்மை

302) தென்னாப்பிரிக்க நாட்டில் இந்தியரின் நலனுக்காகப் போராடிய வீரத்தமிழ் மங்கை யார்? = தில்லையாடி வள்ளியம்மை

303) 'என்னுடைய சகோதரியின் மரணத்தை விடவும் வள்ளியம்மையின் மரணம் எனக்கு பேரிடியாக இருந்தது' - என்று கூறியவர் யார்? = காந்தி

304) தில்லையாடி வள்ளியம்மையை பற்றி காந்தியடிகள் எந்த இதழில் எழுதினார்? = இந்தியன் ஒப்பீனியன்

305) தில்லையாடி வள்ளியம்மையை பற்றி காந்தியடிகள் இந்தியன் ஒப்பீனியன் என்ற இதழில் எழுதிய வாக்கியம் எது? = 'நம்பிக்கை தான் அவரது ஆயுதம்'

306) தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் - என்று கூறியவர் யார்? = காந்தி

307) தென்னாப்பிரிக்க சத்தியாகிரகம் என்ற நூலின் ஆசிரியர் யார்? = காந்தி

308) எந்த நூலில் காந்தியடிகள் தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் - என்று கூறுகிறார்? = தென்னாப்பிரிக்க சத்தியாகிரகம்

309) காந்தியின் சத்தியாகிரக வேள்விப்பணிக்கு முதல் களப்பலியானவர் யார்? = வள்ளியம்மை

310) மாதர்களுக்கு அணிகலன்களாகத் திகழும் துன்பத்தைத் தாங்கும் மனவலிமை, தன்மானம், நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் யார்? = தில்லையாடி வள்ளியம்மை

311) தமிழ்நாட்டில் 'தில்லையாடி' - என்ற ஊர் அமைந்துள்ள மாவட்டம் எது? = நாகப்பட்டினம் - திருக்கடையூருக்கு தெற்கே 3 கி.மீ தொலைவில் உள்ளது

312) வண்டலூர் உயிரியல் பூங்காவில் பிறந்த பெண் புலிக்குட்டிக்குத் தில்லையாடி வள்ளியம்மை நினைவாக வைக்கப்பட்ட பெயர் எது? = வள்ளி

313) காந்தியடிகளை மகாத்மா என்ற உயர்நிலை நோக்கித் திருப்பிய பெருமைக்குரியவர் யார்? = தில்லையாடி வள்ளியம்மை

314) தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்-டெக்ஸ்) சென்னையிலுள்ள தனது எத்தனையாவது விற்பனை மையத்திற்கு 'தில்லையாடி வள்ளியம்மை' என்று பெயர் சூட்டப்பட்டது? = 600 வது கிளை

315) இராணி மங்கம்மாளின் கணவர் பெயர் யாது? = சொக்கநாத நாயக்கர்

316) இராணி மங்கம்மாளின் மகன் பெயர் யாது? = அரங்ககிருட்டின முத்துவீரப்பன்

317) 'அரசாட்சியை அடக்கத்தோடும் தந்திரத்தோடும் நாம் நோக்குதல் வேண்டும். முன்கோபமும் அதன் விளைவும் அரசியலில் ஒருபோதும் வெற்றியைத் தராது. பகைவரை எதிர்கொள்ள எப்போதும் ஆயத்த நிலையில் இருப்பதோடு மிகுந்த பொறுமையுடனும் செயல்படவேண்டும்' - என தன் மகனுக்கு அறிவுரை கூறியவர் யார்? = இராணி மங்கம்மாள்

318) 'நேர்மையை காட்டிலும் உயர்ந்த தெய்வம் இல்லை' என்னும் உணர்வோடு ஆட்சி நடத்தியவர் யார்? = அரங்ககிருட்டின முத்துவீரப்பன்

319) முத்துவீரப்பன் எத்தனை ஆண்டு காலம் ஆட்சி புரிந்தார்? = 7 ஆண்டுகள்

320) முத்துவீரப்பன் எந்த நோயால் பாதிக்கப்பட்டு உயிர் நீர்த்தார்? = அம்மை நோயால்

321) இராணி மங்கம்மாளின் பேரன் பெயர் யாது? = விசயரங்க சொக்கநாதன்

322) இராணி மங்கம்மாளின் பேரன் விசயரங்க சொக்கநாதன் அரியணையில் ஏற்றப்பட்ட ஆண்டு எது? = கி.பி. 1688

323) துயரங்களைத் தாங்கிக்கொண்டு ஆட்சிக் கடமைகளை அழகுற ஆற்றக்கூடிய வீராங்கனை யார்? = இராணி மங்கம்மாள்

324) திருவிதாங்கூர் மன்னரின் பெயர் யாது? = இராஜாஇரவிவர்மா

325) இரவிவர்மா அவர்கள் நாயக்கர் படையைத் தாக்கி அழித்த இடம் எது? = கல்குளம்

326) செஞ்சிக்கோட்டையில் பதுங்கி இருந்த மராட்டிய மன்னன் யார்? = இராஜாராம்

327) செஞ்சிக்கோட்டையில் பதுங்கி இருந்த இராஜாராமை கைது செய்ய ஔரங்கசீப் அனுப்பிய ஆள் யார்? = சல்பீர்க்கான்

328) இராணிமங்கம்மாளின் தளபதி பெயர் யாது? = நரசப்பையன்

329) தஞ்சை ஷாஜிக்கும் இராணி மங்கம்மாளுக்கும் இடையே போர் நடந்த இடம் எது? = தஞ்சை போர்

330) காவிரியின் குறுக்கே அணை கட்டியவர் யார்? = மைசூர் மன்னன் சிக்கதேவராயன்

331) தஞ்சை மற்றும் மதுரைக் கூட்டுப்படையை (மைசூர் போர்) உருவாக்கியவர் யார்? = இராணி மங்கம்மாள்

332) இராணி மங்கம்மாள் எந்த ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் துன்புற்ற போது உணவு, உறையுள் வழங்க ஆணையிட்டார்? = கொள்ளிடம் ஆறு

333) 'ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தைக் கைக்கொண்டு வாழவிடுவதே தருமம்' - என்னும் கொள்கையைப் பின்பற்றியவர் யார்? = இராணி மங்கம்மாள்

334) இராணி மங்கம்மாள் ஆட்சியில் சமயத் தொடர்பாக கைது செய்து சிறைவைக்கப்பட்டவர் யார்? = மெல்லோ பாதிரியார்

335) மங்கம்மாள் தன் அரசவையில் வரவேற்று விருந்தோம்பிய மதகுரு யார்? = போசேத்

336) இஸ்லாமியர்களுக்கு மானியம் அளித்து, பள்ளிவாசல்களுக்கு நிலங்களை மானியமாக வழங்கியவர் யார்? = இராணி மங்கம்மாள்

337) தென்னாட்டை தன்னந்தனியே ஆண்ட பெண்ணரசி என்ற சிறப்பு பெயர் பெற்றவர் யார்? = இராணி மங்கம்மாள்

338) தமிழ்நாட்டில் எந்த நெடுஞ்சாலைக்கு 'மங்கம்மாள் சாலை' என்று பெயரிடப்பட்டது? = கன்னியாகுமரி - மதுரை இடையேயான நெடுஞ்சாலை

339) தமிழ்நாட்டில் ஊஞ்சல் திருவிழா நடைபெறும் மாதம் எது? = ஆனித்திங்கள்

340) மங்கம்மாள் தன் ஆட்சியின் போது கட்டிய கட்டிடங்கள் சிலவற்றைக் கூறுக? = மத்தியச்சந்தை, மதுரைக் கல்லூரி, மதுரை உயர்நிலைப் பள்ளிக் கூடம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பழைய அலுவலகம்

341) ‘இறைவனுக்கு முன்னால் ஏற்றத்தாழ்வுகள் இல்லை, அனைவரும் ஒன்றே அவனை அவன் வழியில் போகவிடுங்கள்’ - என்று பெருந்தன்மையோடு கூறியவர் யார்? = இராணி மங்கம்மாள்

342) தளை எத்தனை வகைப்படும்? = 7 - அவை முறையே :

| | |
|---|---|
| மா முன் நேர் வருவது | நேரொன்றாசிரியத்தளை |
| விளி முன் நிடை வருவது | நிரையொன்றாசிரியத்தளை |
| மா முன் நிரை மற்றும் விளி முன் நேர் வருவது | இயற்சீர் வெண்டளை |
| காய் முன் நேர் வருவது | வெண்சீர் வெண்டளை |
| காய் முன் நிரை வருவது | கலித்தளை |
| கனி முன் நிரை வருவது | ஒன்றிய வஞ்சித்தளை |
| கனி முன் நேர் வருவது | ஒன்றாத வஞ்சித்தளை |

343) மதுரகவி என்று அடைமொழிக் கொண்டவர் யார்? = பாஸ்கரதாஸ்

344) வஞ்சகமாய் நெஞ்சமோடு மொழிதல் - என்ற வரியை பாடியவர் யார்? = மதுரகவி பாஸ்கரதாஸ்

345) இசைப்புலமையுடன் நாடகப் புலமையும் பெற்ற கவிஞர் யார்? = பாஸ்கரதாஸ்

346) நாடக மேடைகளில் விடுதலைப் பாடல்களை இசைத்தவர் யார்? = பாஸ்கரதாஸ்

347) பாஸ்கரதாஸ் அவர்களின் பாடல்களைக் கேட்டுப் பாராட்டியவர் யார்? = காந்தி

348) ‘நிலையில்லா வாழ்விற்காக சொத்துக்களைச் சேர்த்து என்ன பயன்’ - என்று கூறியவர் யார்? = பாஸ்கரதாஸ்

349) ‘உலகம் யாவையும் தாமுள வாக்கலும்’ - எனத் தொடங்கும் பாடல் கம்பராமாயணத்தில் இடம்பெற்றுள்ள காண்டம் எது? = பால காண்டம்

350) கம்பர் பிறந்த ஊர் எது? = நாகப்பட்டினம் மாவட்டம் - மயிலாடுதுறை அருகில் - தேரழுந்தூர்

351) கம்பர் இயற்றிய வேறு நூல்கள் சிலவற்றைக் கூறுக? = ஏர் எழுபது, சிலை எழுபது, சரஸ்வதி அந்தாதி, சடகோபர் அந்தாததி, திருக்கை வழக்கம் ஆகியவை

352) கம்பரை ஆதரித்த வள்ளல் யார்? = திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல்

353) கம்பர் எந்த மன்னனின் அவைப் புலவராக விளங்கினார்? = குலோத்துங்க சோழன்

354) கம்பரின் காலம் எது? = 12 ஆம் நூற்றாண்டு

355) ‘அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத்தம்மை’ - என்ற குறட்பாவில் பயின்று வரும் அணி எது? = உவமை அணி

356) ‘இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்’ - என்ற குறட்பாவில் பயின்று வரும் அணி எது? = எடுத்துக்காட்டு உவமை அணி

357) புலவர் தம் புலமை திறத்தை அறிய இறைவனை வேண்டி எதைப் பெற்றனர்? = சங்கப்பலகையை

358) திருவிளையாடற்புராணத்தில் ‘தருமிக்கு பொற்கழி அளித்த படலம்’ எந்த காண்டத்தில் கூறப்படுகிறது? = திருவாலவாய்க் காண்டம்

359) செண்பகப் பாண்டியனின் வேறு பெயர்கள் சிலவற்றைக் கூறுக? = சூடாமணி பாண்டியன், வையை நாட்டவன்

360) தென்னவனின் குலதெய்வம் என்று பரஞ்சோதி முனிவர் யாரைக் குறிப்பிடுகின்றனர்? = சொக்கநாதன் (அ) சுந்தரபாண்டியன்

361) சொக்கநாதர் அவர்கள் தருமிக்கு அளித்த பாடலின் முதல் வரி எது? = கொங்குதேர் வாழ்க்கை

362) பரஞ்சோதி முனிவர் பிறந்த இடம் எது? = வேதாரண்யம்

363) பரஞ்சோதி முனிவர் இயற்றிய வேறு நூல்கள் சிலக் கூறுக? = திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி, திருமறைக்காட்டு புராணம்

364) பரஞ்சோதி முனிவரின் எந்த நூல் வேதாரண்ய புராணம் என்று அழைக்கப்படுகிறது? = திருமறைக்காட்டு புராணம்

365) திருவிளையாடற்புராணத்தின் நூல் அமைப்பு எது? = 3 காண்டம் + 64 படலங்கள் + 3363 விருத்தப்பாக்களால் ஆனது

366) திருவிளையாடற்புராணத்தின் 3 காண்டங்கள் எது? = 1. மதுரைக் காண்டம் (18 படலங்கள்); 2. கூடற்காண்டம் (30 படலங்கள்); 3. திருவாலவாய்க் காண்டம் (16 படலங்கள்)

367) திருவிளையாடல் புராணம், எந்த புராணத்தின் ஒரு பகுதியான ஆலாசிய மான்மியத்தை அடிப்படையாக கொண்டது ஆகும்? = கந்தபுராணம்

368) திருவிளையாடற்புராண நூலின் உரையாசிரியர் யார்? = ந.மு.வேங்கடசாமி

369) ‘உடல் முழுவதும் கண்களையுடையவன்’ - என்று கூறப்படுபவர் யார்? = இந்திரன்

370) கடம்பவன புராணத்தை எழுதிய ஆசிரியர் யார்? = தொண்டைநாட்டு இளம்பூர் வீமநாத பண்டிதர்

371) ‘இந்தியாவை அடக்கி ஒழுகுவதற்கு யாரும் இல்லை, அதனால்தான் வீழ்ச்சி நேர்ந்தது’ - என்றுக் கூறியவர் யார்? = விவேகானந்தர்

372) பொங்கல் திருவிழா ஆந்திரா, கருநாடகம் ஆகிய மாநிலங்களில்____என அழைக்கப்படுகின்றன? = மகர சங்கராந்தி

373) மார்போலையில் எழுதும் எழுத்தாணி எது? = தந்தம் (மருப்பு)

374) முத்தொள்ளாயிரம் நூலின் நூல் அமைப்பு யாது? = 1800 பாடல்கள் (3 வேந்தர்களுக்கும் 900 பாடல்கள்)

375) முத்தொள்ளாயிர நூலில் புறத்திரட்டு வாயிலாக கிடைக்கும் பாடல்கள் மொத்தம் எத்தனை? = 108 வெண்பாக்கள்

376) பழைய உரை நூல்களில் மேற்கோளாக கிடைத்த முத்தொள்ளாயிர பாடுகள் மொத்தம் எத்தனை? = 22 வெண்பாக்கள்

377) முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியர் பெயர் யாது? = இதுவரை அறியவில்லை

378) 'நாயின் வாயினிர் தன்னை நீரெனா நவ்வி நாவினால் நக்கி விக்குமே' - என்று பாடியவர் யார்? = ஜெயங்கொண்டார்

379) கலிங்கத்துப்பரணி என்ற நூலில் கலிங்க மன்னனின் பெயர் யாது? = அனந்தபன்மன்

380) கலிங்கத்துப்பரணியில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை எத்தனை? = 599 தாழிசைகள்

381) கலிங்கத்துப்பரணியை 'தென்தமிழ்த்தெய்வப்பரணி' - என்று பாராட்டியவர் யார்? = ஒட்டக்கூத்தர்

382) 'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி' - என்று கலிங்கத்துப்பரணிக்கு வரையறை வகுத்த நூல் எது? = பன்னிருபாட்டியல்

383) 'எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது கலிங்கத்துப் பரணியே' - என்று கூறியவர் யார்? = அறிஞர் அண்ணா

384) பரணி இலக்கியங்கள் வேறு சிலவற்றைக் கூறுக? = தக்கயாகப்பரணி, மோகவதைப்பரணி, சீனத்துப்பரணி, வங்கத்துப்பரணி, பாசவதைப்பரணி, திராவிடத்துப்பரணி

385) கவிமணி தேசிகவிநாயகம் பிறந்த ஊர் எது? = தேரூர்

386) உமார்கய்யாம் அவர்கள் எந்த மொழிக் கவிஞர் ஆவார்? = பாரசீக மொழிக் கவிஞர்

387) உமார்கய்யாம் அவர்களின் முழுப்பெயர் யாது? = கியதுதின் அபுல்பாத் உமர்கய்யாம்

388) உமார்கய்யாம் எந்த இரு பாடங்களில் புலமை மிக்கவராக இருந்தவர் யார்? = கணிதம், வானவியல்

389) கவிமணி இயற்றிய வேறு நூல்கள் சிலக் கூறுக? = மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம், குழந்தைச் செல்வம், ஆசியஜோதி

390) ரூபாயத் என்பதன் பொருள் யாது? = நான்கடிச் செய்யுள்

391) ரூபாயத் செய்யுளில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது? = 115 பாடல்கள்

392) உமார்கய்யாமின் ரூபாயத்தின் மொழிப்பெயர்ப்பு நூல் எவ்வாறு அழைக்கப்படுகிறது? = உமார்கய்யாம் பாடல்கள்

393) மணிமேகலையில் ஆபுத்திரன் நாடு அடைந்த காதை எத்தனையாவது காதையாக அமைந்துள்ளது? = 24 வது காதை

394) மணிமேகலை அமுதசுரபி மூலம் முதன் முதலாகப் பிச்சைப் பெற்றது யாரிடம்? = ஆதிரை

395) மணிமேகலை உதயகுமாரனுக்கு பயந்து மறைந்து கொண்ட இடம் எது? = மலர் வனத்தில் உள்ள பளிக்கறை

396) யார் உதவியால் மணிமேகலை அமுதசுரபியை பெற்றாள்? = தீவதிலகை

397) அமுதசுரபியை பெற்ற மணிமேகலை சென்ற இடம் எது? = புகார் நகரம்

398) உடலில் தோன்றும் மூன்று தீவினைகள் எவை என்று மணிமேகலை நூல் கூறுகிறது? = கொலை, களவு, காமம்

399) சொல்லில் தோன்றும் நான்கு தீவினைகள் எவை என்று மணிமேகலை நூல் கூறுகிறது? = பொய் பேசுதல், புறங்கூறுதல், கடுஞ்சொல், பயனற்ற சொல்

400) உள்ளத்தில் தோன்றும் மூன்று தீவினைகள் எவை என்று மணிமேகலை நூல் கூறுகிறது? = பேரவா, கடுஞ்சினம், தெளிவில்லா அறிவு

401) அமுதசுரபி முற்பிறப்பில் யாரிடம் இருந்ததாக மணிமேகலை நூல் கூறுகிறது? = ஆபுத்திரன்

402) மணிமேகலா தெயவம் மணிமேகலைக்கு அளித்த மந்திரங்கள் மொத்தம் யாது? = 1. பசியாற்றிருக்க; 2. வான்வழி பறக்க; 3. விரும்பும் உருவம் எடுக்க

403) ‘தண்டமிழ் ஆசான்’, ‘சாத்தன் நன்னூற் புலவன்’ - என்று பாராட்டி பாடியவர் யார்? = இளங்கோவடிகள்

404) சீத்தலைச் சாத்தனாரின் காலம் எது? = இரண்டாம் நூற்றாண்டு

405) ‘கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை’ - என்ற குறளில் பயின்று வரும் அணி எது? = எடுத்துக்காட்டு உவமையணி

406) கிறித்துவக் கம்பர் என்று அழைக்கப்பட்டவர் யார்? = H.A.கிருட்டினப் பிள்ளை

407) இரட்சணியப் சரிதப்படலம் என்பது யாது? = சிலுவைப்பாடு

408) கிருட்டினப்பிள்ளை அவர்கள் பிறந்த ஊர் எது? = கரையிறுப்பு

409) கரையிறுப்பு என்ற ஊர் அமைந்துள்ள மாவட்டம் எது? = திருநெல்வேலி மாவட்டம்

410) கிருட்டினப்பிள்ளை அவர்கள் வாழ்ந்த இடம் எது? = ரெட்டியார் பட்டி

411) கிருட்டினப்பிள்ளை எந்த வயதில் தன் பெயரை H.A.கிருட்டினப் பிள்ளை என்று மாற்றிக் கொண்டார்? = 30 வது அகவை

412) கிருட்டினப்பிள்ளை தமிழ் இலக்கியங்களை யாரிடம் பயின்றார்? = தன் தந்தையிடம்

413) கிருட்டினப்பிள்ளை தமிழ் இலக்கணங்களை யாரிடம் பயின்றார்? = மாணிக்கவாசகத் தேவரிடம்

414) வடமொழி இலக்கியங்களை கிருட்டினப்பிள்ளை யாரிடம் பயின்றார்? = பிலவணச் சோதிடர்

415) கிருட்டினப்பிள்ளை தமிழாசிரியராக பணியாற்றிய இடம் எது? = சாயர்புரம்

416) கிருட்டினப்பிள்ளை இயற்றிய வேறு நூல்கள் சிலவற்றைக் கூறுக? = இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய குறள்

417) இரட்சணிய யாத்திரிகம் என்பதன் பொருள் யாது? = உயிர் தன்னைக் காக்க வேண்டி இறைவனை நோக்கிச் செல்லும் பயணம் + ஆன்ம ஈடேற்றத்தை விரும்புவார் என்பதும் பொருளாகும்

418) குழந்தை இயேசுவை, ஏரோது மன்னனின் கொடுமையிலிருந்து காப்பாற்றும் பொருட்டுத், தந்தை சோசப்பும் தாய் மரியன்னையும் குழந்தையோடு எந்த நாட்டுக்கு சென்றார்? = எகிப்து நாடு

419) இயேசு அவர்கள் யாரிடம் திருமுழுக்கு பெற்றார்? = புனித யோவான்

420) இயேசுவைக் காட்டிக் கொடுத்தவர் யார்? = யுதாசு

421) இயேசு, யூதேய மரபுகளை மீறினார் எனப் பொய்க் குற்றஞ் சாட்டி, எந்த நாட்டு மன்னன் மரணதண்டனை விதித்தான்? = பிலாத்து மன்னன்

422) இயேசுவின் தோள்களில் சிலுவையினைச் சுமத்தித் துன்புறுத்திக் எந்த மலைக்கு கொண்டுச் சென்றனர்? = கல்வாரிமலை

423) கிருட்டினப்பிள்ளை பிறப்பு மற்றும் இறப்பு ஆண்டு எது? = 1827 - 1900

424) ஜான் பனியன் என்ற கவிஞர் எழுதிய நூல் எது? = பில்கிரிம்ஸ் புரோகிரஸ்

425) யார் எழுதிய நூலை தழுவி இரட்சணிய யாத்திரிகம் என்ற நூல் எழுதப்பட்டது? = ஜான் பன்யன் எழுதிய நூலைத் தழுவி எழுதப்பட்டது

426) மலர்கலை தொடுப்பது போலவே சீர்களிலும் அடிகளிலும் மோனை முதலியன அமைய தொடுப்பது? = தொடை

427) தொடை எத்தனை வகைப்படும்? = 8 வகை (1. மோனத்தொடை, 2. எதுகைத்தொடை, 3. முரண்தொடை, 4. இயைபுத்தொடை, 5. அளபெடைத்தொடை, 6. இரட்டைத்தொடை, 7. அந்தாதித்தொடை, 8. செந்தொடை)

428) தொடை விகற்பங்கள் என்று அழைக்கப்படுவது எது? = இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று

429) தொடை விகற்பங்கள் மொத்தம் எத்தனை வகைப்படும்? = 35 வகைகள்

430) தொடை விகற்பங்கள் செய்யுளில் பெறும் இடங்களை பற்றிக் கூறுக :-

| | |
|---|---|
| இணை | செய்யுளில் 1, 2 இடம் பெற்று வருவது |
| பொழிப்பு | செய்யுளில் 1, 3 இடம் பெற்று வருவது |
| ஒரூஉ | செய்யுளில் 1, 4 இடம் பெற்று வருவது |
| கூழை | செய்யுளில் 1, 2, 3 இடம் பெற்று வருவது |
| மேற்கதுவாய் | செய்யுளில் 1, 3, 4 இடம் பெற்று வருவது |
| கீழ்க்கதுவாய் | செய்யுளில் 1, 2, 4 இடம் பெற்று வருவது |
| முற்று | செய்யுளில் 1, 2, 3, 4 இடம் பெற்று வருவது |

431) பெருஞ்சித்தானாரின் இயற்பெயர் எது? = துரை.மாணிக்கம்

432) பாரதிதாசனின் தலைமாணக்கர் என்று அழைக்கப்படுபவர் யார்? = பெருஞ்சித்தானார்

433) பெருஞ்சித்தனார் பணியாற்றிய இதழ்கள் எது? = தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்

434) பெருஞ்சித்தனார் இயற்றிய பள்ளிப்பறவை நூலின் மூன்று பிரிவுகள் யாவை? = குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை

435) மீ.இராசேந்திரனின் சிறுதுளி பெருவெள்ளம் தலைப்பினில் எத்தனை கவிதைகளை எழுதி உள்ளார்? = 45 கவிதைகள் ( 6 சிறு தலைப்புடன்)

436) உலகில் இல்லாத பொருளை ஒன்றிற்கு உவமையாக்கி கூறும் அணி எது? = இல்பொருள் உவமையணி

437) அயல்நாட்டில் எந்த வழி பயணம் மிகவும் பொருளை ஈட்டித் தந்தது? = நீர்வழிப் பயணம்

438) தமிழர்களின் பொருள்களை விரும்பி பெற்ற நாடுகள் சிலவற்றைக் கூறுக? = எகிப்து , பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா, சீனம்

439) கடல் கந்த தமிழ் சொற்கள் சிலவற்றைக் கூறுக :

தமிழ் - கிரேக்கம்; அரிசி - ஒரைஸா; கருவூர் - கரோரா; காவிரி - கபிரில்;

குமரி - கொமாரி; சோபட்டினம் - சோபட்னா; தொண்டி - திண்டிஸ்; மதுரை - மதோரா முசிறி - முசிரில்;

440) ஆங்கில வார்த்தைக்கு எதிரான சில தமிழ் வார்த்தைகள் :

சுவிட்ச் - பொத்தான்; ஐஸ்வாட்டர் - குளிர் நீர்; கூல்ட்ரிங்ஸ் - குளிர்பானம்;

கூல்ட்ரிங்ஸ் - குளிர்பானம்; கிரைண்டர் - மின் அரைவை; பிரிஜ் - குளிர்சாதனப் பெட்டி

டீ - தேநீர்; வாஷிங்மெஷின் - சலவை இயந்திரம் டெலிபோன் - தொலைபேசி

**441) அறுசுவையின் பயன்கள் அறிக :**

**இனிப்பு - வளம்; துவர்ப்பு- ஆற்றல்; கைப்பு - மென்னை;**

**உவர்ப்பு - தெளிவு; புளிப்பு - இனிமை; கார்ப்பு - உணர்வு;**

442) அருஞ்சொற்பொருள் :

உளவாக்கல் - உண்டாக்குதல், படைத்தல்
நீக்கல் - அழித்தல்
நீங்கலா - இடைவிடாது
அலகிலா - அளவற்ற
அன்னவர் - அத்தகைய இறைவர்
சரண் - அடைக்கலம்
நிலைபெறுத்தல் - காத்தல்
தலைவர் - இறைவர்
அகழ்வாரை - தோண்டுபவரை
தலை - சிறந்த பண்பு
பொறுத்தல் - பொறுத்துக்கொள்ளுதல்
இறப்பு - துன்பம்
இன்மை - வறுமை
ஒரால் - நீக்குதல்
மடவார் - அறிவிலிகள்
விருந்து - வீட்டிற்கு புதியவராய் வந்தவர்
நிறை - சால்பு
ஒறுத்தாரை - தண்டித்தவரை
போன்றும் - உலகம் அழியும்வரை
நோநொந்து - துன்பத்திற்கு வருந்தி
மிக்கவை - தீங்குகள்
தகுதியான் - பொறுமையால்
துறந்தார் - பற்றற்றவர்
இன்னா - தீய

கண்ணோட்டம் - இறக்கம் கொள்ளுதல்

எண்வனப்பு - ஆராய்சிக்கு அழகு

வேந்தன் - அரசன்

வனப்பு - அழகு

கிளர்வேந்தன் - புகழுக்குரிய அரசன்

வாட்டான் - வருத்தமாட்டான்

எம்பி - என் தம்பி

களிக்க - மகிழ

மடப்பிடி - பாஞ்சாலி

கோமான் - அரசன்(திருதராட்டிரன்)

நுந்தை - நும் தந்தை

அடவி - காடு

தடந்தோள் - வலியதோள்

மருங்கு - பக்கம்

குலவு - விளங்கும்

பண்ணவர் - தேவர்

அரம்பையர் - தேவமகிளிர்

வீறு - வலிமை

கோலமுறு - அழகு மிக்க

செறிந்த - அடர்ந்து

கா - காடு

குலவு - விளங்கும்

ஞாலம் - உலகம்

ஞானம் - அறிவு

புன்மை - இழிந்த தன்மை

சதுரங்கச் சேனை - நால்வகைப் படைகள்

நிகழ்ற்றிய - நிழல் செய்த

துஞ்சான் - துயிலான்

மா - விலங்கு

நாழி - அளவுப்பெயர்

ஈதல் - கொடுத்தல்

துய்ப்போம் - நுகர்வோம்

நடுநாள்யாமம் - நள்ளிரவு

கல்லா -கல்வியறிவில்லாத

தப்புந -இழக்க

நீர் - கடல்

கருங்கோல் - கருமை நிறமுடைய கொம்பு

உயர்ந்தன்று - உயர்ந்தது

அளவின்று - அளவினையுடையது.

வையை நாடவன் - பாண்டியன்

உய்ய - பிழைக்க

இரந்து செப்பினான் - பணிந்து வேண்டினான்.

தென்னவன் குலதெய்வம் - சொக்கநாதன் (அ)) சுந்தரபாண்டியன்

இன்னல் - துன்பம்

நல்கினார் - அளித்தார்

இறைஞ்சி - பணிந்து

அளக்கில் கேள்வியார் - அளவற்ற கேள்வியறிவினர்.

சிரம் துளக்கி - தலையசத்து

புறம்பு - வெளியில்

பையுள் - வருத்தம்

நம்பி - தருமி

கண்டம் - கழுத்து

வழுவு பாடல் - குற்றமுள்ள பாடல்

ஆர்அவை - (புலவர்) நிறைந்த அவை

சீரணி - புகழ்வாய்ந்த

வேணி - செஞ்சடை

மீனவன் - மீன்கொடியை உடைய பாண்டியன்

விபுதர் - புலவர்

பொற்கிழி - பொன் முடிப்பு

கிளத்தினேன் - சொன்னேன்

ஓரான் - உணரான்

அற்குற்ற - (அல்கு+ உற்ற) - இருளையொத்த

நாற்றம் - நறுமணம்

குழல் - கூந்தல்

அல்கு - இரவு

ஞானப்பூங்கோதை - உமையம்மை

உம்பரார் பதி - தேவர் தலைவன் (இந்திரன்)

கரந்தான் - மறைந்தான்

நாவலன் - புலவர்

செவிச்செல்வம் - கேள்விச்செல்வம்

தலை - முதன்மை

போழ்து - பொழுது

ஈயப்படும் - அளிக்கப்படும்

ஆவி உணவு - தேவர்களுக்கு வேல்வியின்போது கொடுக்கப்படும் உணவு

ஆன்றோர் - கல்வி, கேளவி, பண்பு

ஒப்பர் - நிகராவர்

ஒற்கம் - தளர்ச்சி

ஊற்று - ஊன்றுகோல்

ஊற்றுக்கோல் - ஊன்றுகோல்

ஆன்ற - நிறைந்த

வணங்கிய - பணிவான

அற்றே - போன்றதே

எனைத்தானும் - எவ்வளவு சிறிதே ஆயினும்

அனைத்தானும் - கேட்ட அளவிற்கு

பிழைத்துணர்ந்தும் - தவறாக உணர்ந்திருந்தாலும்

பேதைமை - அறியாமையின் பாற்பட்ட தீய சொற்கள்.

இழைத்துணர்ந்து - நுட்பமாக ஆராய்ந்து

ஈண்டிய ஆய்ந்தறிந்த

தகையவே - நுட்பமாகிய

வணங்கிய - பணிவான

வாயினராதல் - மொழியினை உடையவர்

வாயுணர்வின் மாக்கள் -உணவுச் சுவை மட்டும் அறிந்தோர்.

அவியினும் - இறந்தாலும்

கந்துகம் - பந்து

கோணம் - வாட்படை

குந்தம் - சூலம்

கொடை - வேனிற்காலம்

பாடலம் - பாதிரிப் பூ

மா - மாமரம்

சடிலம் - சடை

கிள்ளை - கிலி

உய்ம்மின் - பிழைத்துக் கொள்ளுங்கள்

மலை - வளமை

வள் - நெருக்கம்

விசும்பு - வானம்

பரவு - புறா

நிறை - எடை

ஈர்த்து - அறுத்து

துலை - துலாக்கோல் (தராசு)

நிறை - ஒழுக்கம்

மேனி - உடல்

மறுப்பு - தந்தம்

ஊசி - எழுத்தாணி

மறம் - வீரம்

கனல் - நெருப்பு

மாறன் - பாண்டியன்

களிறு - யானை

விசும்பு - வானம்

துலை - துலாக்கோல்

மருப்பு - தந்தம்

கனல் - நெருப்பு

களிறு - யானை

தீயின்வாய் - நெருப்பில்

சிந்தை - எண்ணம்

கூர - மிக

நவ்வி - மான்

முகில் - மேகம்

மதி - நிலவு

உகு - சொரிந்த(பொழிந்த

புனல் - நீர்

ஆயம் - தோழியர் கூட்டம்

ஆசனம் - இருக்கை

நாத்தொலைவில்லை - சொல் சோர்வின்மை

யாக்கை - உடல்

பிணிநோய் - நீங்கா நோய்

பேதைமை - அறியாமை

செய்கை - இருவினை

உணர்வு - அறிவியல் சிந்தனை

அரு - உருவமற்றது

உரு - வடிவம்

வாயில் - ஐம்பொறிகள்

ஊறு - புலன்களின் இயல்பு

நுகர்வு - இன்பதுன்ப நுகர்ச்சி

வேட்கை - விருப்பம்

பவம் - பயன் நோக்கிய செயல்

தோற்றம் - பிறப்பு

பெரும்பேறு - வீடுபேறு

கொடு - கொம்பு

அலகில - அளவற்ற

தொக்க விலங்கு - விலங்குத்தொகுதி

குரலை - புறம் பேசுதல்

வெஃகல் - பெருவிருப்பம்

வெகுளல் - கடுஞ்சினம் கொள்ளுதல்

பொல்லாக் காட்சி - மாயத் தோற்றம்

சீலம் - ஒழுக்கம்

தானம் - கொடை

புரைதீர் - குற்றம் நீங்கிய

கேண்மின் - கேளுங்கள்

உய்ம்மின் - போற்றுங்கள்

உறைதல் - தங்குதல்

கூற்று - எமன்

மாசில் - குற்றமற்ற

புக்கு - புகுந்து

இடர் - இன்னல்

முத்தேர் நகை - முத்துச் சிரிப்பு

தொழுது - வணங்கி

கடன் - கடமை

சான்றோர் - நல்ல குணங்கள் நிறைந்தவர்

நாண் - நாணம்

ஒப்புரவு - உதவுதல்

கண்ணோட்டம் - உயிர்களிடத்து இரக்கம்

வாய்மை - உண்மை

சால்பு - சான்றாண்மை

ஆற்றுவார் = செயல் செய்பவர்

ஆற்றல் - வலிமை

மாற்றார் -பகைவர்

துலையல்லார் - ஆற்றலில் குறைந்தவர்

கட்டளை - உரைகடல்

இன்னா - தீங்கு

இனிய - நன்மை

செய்யாக்கால் - செய்யாவிடத்து

இன்மை - வறுமை

இளிவன்று - இழிவானதன்று

திண்மை - வலிமை

ஊழி - உலகம்

ஆழி - கடல்

இருநிலம் - பெரிய நிலம்

பொறை - சுமை

இசைபட - புகழுடன்

கயவர் - கீழ்க்குணமுடையோர்

பகர்வது - சொல்வது

தெளிவீரே - தெளியுங்கள்

துவ்வா - நுகராத

அகன்று - விலகி

ஆழி - கடல்

விரிகடல் - பரந்த கடல்

காயும் ரவிச்சுடர் - சுட்டெரிக்கும் சூரியக்கதிர்

யோகம் - தியானம்

மீனவர்களுக்கு இரவில் விளக்காக விளங்குவது - விடிவெள்ளி

மீன்வலை - மீனவரின் படிக்கும் நூல்

மீனவர் கண்ணடியாகப் பயன்படுத்துவது - முழுநிலவே
மீனவரின் வாழும் வீடு - கட்டு மரம்
உறுதி - உளஉறுதி
சொரூபம் - வடிவம்
தரணி - உலகம்
தாரம் - மனைவி
சேவை - தொண்டு
அயலார் - உறவல்லாதோர்
ஈண்டு - இவ்விடம்
புகல்வது - சொல்வது
காண்டகு - காணத்தக்க
இருப்பாணி - இரும்பு ஆணி
கடாவினார் - அடித்தார்
கீண்டு - தோண்டி
செற்றம் - சினம்
குருசு - சிலுவை
சொற்ற - சொன்ன
துளக்கம் - விளக்கம்
சுருதிமுதல் - மறை முதல்வராகிய இயேசுநாதர்
சதைப்புண்டு - சிதைக்கப்பட்டு
பன்னரிய - சொல்லுதற்கரிய
பலபாடு - பல துன்பம்
இரும்பொறை - பெரும்போறுமை
வித்தகன் - ஆண்டவன்
தொழும்பர் - அடியார்
இசைபெறுதல் - புகழ்பெறுதல்
துஞ்சினவர் - உறங்கியவர்
கீண்டு - பிளந்து
இருப்புமுனை - ஆணியின் நுனி
வதைப்புண்டு - துன்பமடைந்து
மாண்டுபடும்போது - இறக்கும்நிலையில்
இரட்சகர் - காப்பவர்
மன்றாடும் - மிக வேண்டுதல்
ஆகடியம் - ஏளனம்
வையை நாடவன் - பாண்டியன்
உய்ய - பிழைக்க
இறந்து - பணிந்து
தென்னவன் குலதெய்வம் - சொக்கநாதன் (அ) சுந்தரபாண்டியன்
இறைஞ்சி - பணிந்து
சிரம் - தலை

மீனவன் - மீன் கொடியை உடைய பாண்டியன்

விபுதர் - புலவர்

தூங்கிய - தொங்கிய

பொற்கிழிய - பொன்முடிப்பு

நம்பி - தருமி

பைபுள் - வருத்தம்

பனவன் - அந்தணன்

கண்டம் - கழுத்து

வழுவு - குற்றம்

சீரணி - புகழ் வாய்ந்த

வேணி - செஞ்சடை

ஓரான் - உணரான்

குழல் - கூந்தல்

ஞானப்பூங்கோதை - உமையம்மை

கற்றைவார் சடையன் = சிவபெருமான்

உம்பரார் பத்தி - இந்திரன்

நுதல் - நெற்றி

ஆய்ந்த நாவலன் - நக்கீரன்

காய்ந்த நாவலன் - இறைவன்

443) பிரித்தெழுதுக :

ஆரளவு - அருமை+அளவு

கருங்கோல் - கருமை+ கோல்

பெருந்தேன் - பெருமை+தேன்

சுவையுணரா = சுவை + உணரா

வாயுணர்வு = வாய் + உணர்வு

செவிக்குணவு = செவிக்கு + உணவு

தந்துய்ம்மின் = தந்து + உய்ம்மின்

வில்லெழுதி = வில் + எழுதி

பூட்டுமின் = பூட்டு + மின்

மருப்பூசி = மறுப்பு + ஊசி

எமதென்று = எமது + என்று

மொய்யிலை = மெய் + இலை

வாயினீர் - வாயின் + நீர்

வெந்துலர்ந்து - வெந்து + உலர்ந்து

காடிதனை - காடு + இதனை

கருமுகில் - கருமை + முகில்

வெண்மதி - வெண்மை + மதி

எழுந்தெதிர் = எழுந்து + எதிர்
அறிவுண்டாக = அறிவு + உண்டாக
இயல்பீராறு = இயல்பு + ஈறு + ஆறு
நன்மொழி = நன்மை + மொழி
எனக்கிடர் = எனக்கு + இடர்
நல்லறம் = நன்மை + அறம்
தொழுதேத்தி = தொழுது + ஏத்தி
உண்டென்று = உண்டு + என்று
ஈண்டினியான் - ஈண்டு+இனி+யான்
காண்டகு - காண் + தகு
சேவடி - செம்மை + அடி
வெவ்விருப்பாணி - வெம்மை + இரும்பு+ ஆணி
மற்றிரண்டு - மற்று+இரண்டு
குருசேற்றி - குருசு + ஏற்றி
தன்னரிய - தன் + அரிய
தவிப்பெய்தி - தவிப்பு + எய்தி
இத்தகைய - இ+தகைய
மனநலம் - மனம் + நலம்
எடுத்துரைக்கும் - எடுத்து + உரைக்கும்
ஈண்டிவரே - ஈண்டு + இவரே
இருப்புமுனை - இரும்பு
எழுத்திட்டார் - எழுத்து + இட்டார்
என்றாகடியமான - என்று + ஆகடியம் + ஆன
பங்கிட்டார் - பங்கு + இட்டார்

444) இலக்கண குறிப்பு தருக :

யாவையும் - முற்றும்மை
ஆக்கல், நீக்கல், விளையாட்டு - தொழிற்பெயர்
அலகிலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
பொறுத்தல் - தொழிற்பெயர்
அகல்வார், இகழ்வார் - வினையாலணையும் பெயர்
மறத்தல், பொறுத்தல் - தொழிற்பெயர்
நன்று - குறிப்பு வினைமுற்று
விருந்து - பண்பாகு பெயர்
ஒரால், நீக்குதல் - தொழிற்பெயர்
நீங்காமை - எதிர்மறைத் தொழிற்பெயர்
ஒருத்தார், பொறுத்தார் - வினையாலணையும் பெயர்
தற்பிறர் - ஏழாம் வேற்றுமைத் தொகை.

செய்யினும் - இழிவு சிறப்பும்மை
நொந்து - வினையெச்சம்
அரண், திறன் - ஈற்றுப்போலிகள்
விடல் - அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று
இறந்தார் - வினையாலணையும் பெயர்
உண்ணாது - வினையெச்சம்
கண்ணோட்டம், செல்லாமை, உறைதல், என்றல் - தொழிற்பெயர்கள்
கேட்டார், வாட்டான் - வினையாலணையும் பெயர்
அழைத்தனன் - முற்றெச்சம்
மாநகர் - உரிச்சொற்றொடர்
சார்ந்தவர் - வினையாலணையும் பெயர்
நுந்தை - நும் தந்தை என்பதன் மரூஉ
அடவி மலையாறு - உம்மைத்தொகை
கடந்து - வினையெச்சம்
தடந்தோள் - உரிச்சொற்றொடர்
செறிந்து, பாய்ந்து - வினையெச்சம்
பாலாடையும் நறுநெய்யும் தேனும் - எண்ணும்மை
நீளமுடி, நன்செய், புன்செய் - பண்புத்தொகை
காத்தல் - தொழிற்பெயர்
தொல்லுலகு - பண்புத்தொகை
தாளமும் வேளமும் - எண்ணும்மை
பதமலர் - உருவகம்
பாய்ந்து, செறிந்து - வினையெச்சங்கள்
ஞாலமெலாம், மக்களெலாம் - எல்லாம் எனபதன் தொகுத்தல் விகாரம்.
காத்தல் - தொழிற்பெயர்
தாளமும் மேளமும் - எண்ணும்மை
வெண்குடை - பண்புத்தொகை
நாழி - ஆகுபெயர்
ஈதல் - தொழிற்பெயர்
கல்லா ஒருவற்கும் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
துய்ப்போம் - தன்மைப் பன்மை வினைமுற்று
நிலத்தினும், வானினும், நீரினும் - உயர்வு சிறப்பும்மை
கருங்கோல், பெருந்தேன் - பண்புத்தொகை
உரைத்து, இரந்து - வினையெச்சங்கள்
சொல்லி, இறைஞ்சி - வினையெச்சங்கள்
விளக்கி, சிறந்து - வினையெச்சங்கள்
மகிழ்ந்த - தொழிற்பெயர்
தூங்கிய, ஆயந்த - பெயரெச்சங்கள்
நேர்ந்த - வினையெச்சம்
கொண்டு, வைத்து - வினையெச்சங்கள்

நோக்கி - வினையெச்சம்

கிளத்தினேன் - தன்மை ஒருமை வினைமுற்று

தேராக்கீரன் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

புனைமலர் - வினைத்தொகை

பற்றுவான், அஞ்சான் - வினையாலணையும் பெயர்கள்

குற்றம் - தொழிற்பெயர்

விழுந்து - வினையெச்சம்

செந்நீ, வெம்மை - பண்புத்தொகை

தேய்ந்த, பாய்ந்த, ஆய்ந்த, காய்ந்த - பெயரெச்சங்கள்

வயிற்றுக்கும் - இழிவு சிறப்பும்மை

கேட்க - வியங்கோள் வினைமுற்று

இழுக்கல், ஒழுக்கம் - தொழிற்பெயர்கள்

ஆன்ற - பெயரெச்சம்

அவியினும் வாழியினும் - எண்ணும்மை

அவியுணவு - இரு பெயரொட்டுப் பண்புத்தொகை

ஊற்றுக்கோல் - ஊன்று கோல் என்பதன் வலித்தல் விகாரம்

ஆன்ற பெருமை - பெயரெச்சம்

கேளாத் தகையவே - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

எழுதி, புரந்து - வினையெச்சம்

படித்த, தீர்த்த - பெயரெச்சம்

பாடாத, பறவாத, சூடாத - எதிர்மறைப் பெயரெச்சம்

விடல் - தொழிற்பெயர்.

மாமலை - உரிச்சொற்றொடர்

நெடுமதில் - பண்புத்தொகை

வாங்குவில் - வினைத்தொகை

உயர்துலை - வினைத்தொகை

குறையா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

இலைவேல் - உவமைத்தொகை

மருப்பூசி, மார்போலை - உருவகம்

மாறன்களிறு - ஆறாம் வேற்றுமைத் தொகை

வெந்து, உலர்ந்து, எனா, கூர - வினையெச்சங்கள்

செந்நாய் - பண்புத் தொகை

கருமுகிலும் , வெண்மதியும் - எண்ணும்மை

கருமுகில், வெண்மதி - பண்புத்தொகைகள்

கடக்க ஓடி, இளைத்து - வினையெச்சங்கள்

வியர்த்த வியர்வன்றோ - பெயரெச்சம்

தேவியும் ஆயமும் - எண்ணும்மை

அருந்தவர், நல்வினை - பண்புத்தொகை

வாழ்க - வியங்கோள் வினைமுற்று

செய்தவம், வீழ்கதிர் - வினைத்தொகை

பெரும்பேறு - பண்புத்தொகை

ஆழ்நரகு - வினைத்தொகை

பல்லுயிர், நல்லவினை, தீவினை, பேரின்பம் - பண்புத்தொகை

ஆய்தொடி நல்லாய் - இரண்டாம் வேற்றுமா உருபும் பயனும் பயனும் உடன் தொக்க தொகை

காமத்தீ - உருவகம்

கடுஞ்சொல் - பண்புத்தொகை

பொல்லக்காட்சி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

தெளிதல் - தொழிற்பெயர்

பயன் தெரிபுலவர் - வினைத்தொகை

அரைசன் - இடைப்போலி

நல்லறம் - பண்புத்தொகை

என்ப - பலர்பால் வினைமுற்று

மேற்கொள்பவர் - வினையாலணையும் பெயர்

உள்ளதூஉம் - இன்னிசையளபெடை

அன்று - குறிப்புவினை முற்று

கண்ணோட்டம் - தொழிற்பெயர்

கொல்லா நலத்தது, சொல்லா நலத்தது - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பணிதல் - தொழிற்பெயர்

ஆற்றுவார், மாற்றார் - வினையாலணையும் பெயர்

இன்மை, திண்மை - பண்புப் பெயர்கள்

சான்றவர் - வினையாலணையும் பெயர்

இருநிலம் - உரிச்சொற்றொடர்

மன், ஓ - அசைச்சொற்கள்

தளிர்க்கை - உவமைத்தொகை

பழந்தமிழ், சிற்றினம், பெருங்குணம் - பண்புத்தொகை

வழங்கி - வினையெச்சம்

கற்றல், பெறுதல், வாழ்தல் - தொழிற்பெயர்

நோக்கி - வினையெச்சம்

துவ்வா விடம் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

அன்பும் ஆர்வமும் அடக்கமும் - எண்ணும்மை

இன்ப சொரூபம் - உருவகம்

செங்கை, சேவடி, வெவ்விருப்பு - பண்புத்தொகைகள்

இருப்பாணி - வலித்தல் விகாரம்

கனிவாய் - உவமைத்தொகை

வன்மறவோர் பண்புத்தொகை

மனக்குரங்கு - உருவகம்

நாடுநகர் - உம்மைத்தொகை

செம்பொன் - பண்புத்தொகை

மாடும்ஆடும் - எண்ணும்மை

உரைத்து, இரந்து - வினையெச்சம்

சொல்லி, இறைஞ்சி - வினையெச்சம்
மகிழ்ச்சி - தொழிற்பெயர்
தூங்கிய, ஆய்ந்த - பெயரெச்சம்
நேர்ந்து - வினையெச்சம்
கொண்டு, வைத்து - வினையெச்சம்
தேரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
பனைமலர் - வினைத்தொகை
பற்றுவான், அஞ்சான் - வினையாலணையும் பெயர்
குற்றம் - தொழிற்பெயர்
தேய்ந்த, பாய்ந்த, ஆய்ந்த, காய்ந்த - பெயரெச்சம்
விழுந்து - வினையெச்சம்
வம்மை - பண்புத்தொகை

### 445) பழமொழி அறிவோம் :

1. Bend the tree while it is young - ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

2. As is the mother, so is her daughter - தாயைப்போலப் பிள்ளை, நூலைப் போல சேலை

3. A friend in need is a friend indeed - உயிர்காப்பான் தோழன்

4. A man of courage never wants weapons - வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

5. Blood is thicker than water - தான் ஆடாவிட்டாலும் தன்தசை ஆடும்

.

6. In a fiddler's house all are dancers - கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்

7. No man can flay a stone - கல்லிலே நார் உரிக்க முடியுமா?

8. Difficulties give way to diligence - கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்

.